



ஆனால் நிச்சயமாய் அதனுடைய விலை இதைவிட அதிகம்தான்?
...அப்படியில்லை... கோல்டன் பிளாட்டினம் பேனா முன் இருந்த விலையான ரூ. 3-1-0 க்கே கிடைக்கிறது. சரக்குக்குறைவு ஏற்பட்டிருந்தாலும், விலைவாசிகள் அதிகமாயிருந்த போதிலும் கோல்டன் பிளாட்டினம் பேனாவின் இலக்ஷணம் எப்பொழுதும் போல உயர்வுள்ளதாகவே இருக்கிறது. ஒவ்வொரு உண்மையான பிளாட்டினம் பேனா குழலின் மேலும் நிப்பின் மேலும் பேனாவின் பெயர் செதுக்கப்பட்டிருக்கிறது— "பிளாட்டினம்" என்ற பெயர் இருக்கிறதா என்று பாருங்கள். போலிகளை வாங்காதீர்கள்
ரூ. 3 1/1
கோல்டன் பிளாட்டினம்
GOLDEN Platignum REGD
இங்கிலாந்தில் செய்யப்பட்டது.
ஏகவிநியோக வியாபார உரிமையாளர்கள்:-
முல்லர் அன்டு பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்
15, கங்குராம செட்டித் தெரு, மதராஸ்

# வெளிவரும் தேதியை எதிர்பாருங்கள்!





இப்பொழுது தான் என் சட்டைகள் உண்மையாகவே வெளுப்பாகவும் சுத்தமாகவும் இருக்கின்றன!
ஆம் — அது நான் ஸன்லைட் சோப் உபயோகிக்க ஆரம்பித்திருப்பதனால் தான்!
ஸன்லைட்டால் சுத்தம் செய்யப்பட்ட ஆடைகள் எப்பொழுதும் முன் இருந்ததை விட அதிகச் சுத்தமாகவும் வெண்மையாகவும் காண்கின்றன. ஸன்லைட்டின் தாராளமான நுரை ஒவ்வொரு இழைகளிடையேயும் புகுந்து அடித்துத் துவைக்காமலே—ஜாஸ்தி அழுக்குப்படிந்த பாகங்களிலிருந்துகூட—மலினங்களைப் பூராவும் சுலபமாக அகற்றுகிறது. இச்சோப் மகிழ்ச்சிதரும் புதுமையையும் மணத்தையும் துணிகளுக்குக் கொடுக்கிறது. மேலும் உங்கள் கைகளுக்கு நன்மையளிப்பதையும் காண்பீர்கள்.
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்
LEVER BROTHERS (INDIA) LIMITED

# கல்கி

## பொருளடக்கம்


மலர் 7 | இதழ் 18 — நவம்பர் 30 — சர்வசித்து௵ கார்த்திகை 15




"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

தமிழகத்தில் முன்னாளில் சேரசோழ பாண்டிய மன்னர்களும் காஞ்சி பல்லவ சக்கரவர்த்திகளும் சிறந்து விளங்கினார்கள். அவர்களுடைய பரம்பரையில் இன்று தனித் தமிழரசராக விளங்குபவர் புதுக்கோட்டை மகாராஜா ஆவர். இராஜ்யம் சிறிதாயினும் குலமும் பரம்பரையும் பெரியன. காஞ்சி சக்கரவர்த்திகளுக்குரிய தொண்டைமான் பட்டத்துக்கு இன்று புதுக்கோட்டை அரசர் உரிமை பெற்றிருக்கிறார்.

தமிழ் நாட்டில் தற்போதுள்ள ஒரே தனித் தமிழ் அரசர் காலப் போக்கைக் கருதித் தம் இராஜ்யத்தில் ஜனநாயக ஆட்சி முறையை அமைப்பதில் முன் நின்றிருந்தால் நமக்கெல்லாம் எவ்வளவோ பெருமையாயிருந்திருக்கும். முன் நிற்காவிட்டாலும் பரவாயில்லை, ரொம்பப் பின்னும் நிற்காமலிருக்க வேண்டுமே என்று இப்போது நாம் கவலைப்பட வேண்டியதாயிருக்கிறது.




புதுக்கோட்டை சமஸ்தானத்தில் ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதற்காக ஸ்டேட் காங்கிரஸ் வெகு நாளாகப் பாடுபட்டு வந்திருக்கிறது. இப்போது திருவாங்கூர், மைசூர் சமஸ்தானங்களைப் பின்பற்றிச் சத்தியாக்கிரஹத்தை மேற்கொள்வதென்று ஸ்டேட் காங்கிரஸ் தீர்மானித்து. ஆகஸ்டு வீரரும் தலைவருமான ஸ்ரீ முத்துசாமி வல்லத்தரசு அவர்களின் தலைமையில் சத்தியாக்கிரஹப் படையும் தயாராயிற்று.

இந்தச் சமயத்தில் நமது காரைக்குடி சா. கணேசன் அவர்கள் தலையிட்டு ராஜி பேசப் புகுந்தார். ராஜிப் பேச்சு திருப்திகரமாக நடந்து நல்ல முடிவு ஏற்பட்டது என்று அறிவிக்கப்பட்டது. அப்புறம் பார்த்தால், அரை வாசி நல்ல முடிவுதான் ஏற்பட்டிருப்பதாகத் தெரிந்தது.

அதாவது, புதுக்கோட்டையின் நிரந்தர அரசியலை அமைப்பதற்காக மகாராஜா ஆறு மாதத்தில் கூட்டச் சம்மதித்திருக்கும் அரசியல் நிர்ணய சபை திருப்திகரந்தான்.

ஆனால் மற்ற சமஸ்தானங்களில் நடந்திருப்பது போல், உடனே இடைக்கால ஜனநாயக சர்க்கார் அமைக்கும் விஷயம் திருப்திகரமாகத் தீர்க்கப்படவில்லை.

புதிய அரசியல் விஷயத்தில் பொது ஜனங்கள் உற்சாகம் கொள்ள வேண்டுமானால் இப்போதுள்ள நிர்வாகம் உடனே மாறவேண்டும் என்பதை நாடெங்கும் அநுபவத்தில் கண்டிருக்கிறோம்.

மேற்படி அநுபவத்தை யொட்டி உடனே நடவடிக்கை எடுத்துக்கொண்டு இடைக்கால ஆட்சியை அமைக்குமாறு புதுக்கோட்டை மன்னர் ஸ்ரீ பிரஹதாம்பா தாஸ் ராஜ ராஜ கோபால தொண்டைமான் பகதூர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

# THE MUSIC ACADEMY, MADRAS

## 21st CONFERENCE AND CONCERTS. 23rd Dec. '47 - 1st Jan. '48.

Opener: Rajah Saheb of Sivaganga. President: Rajyasevanirata Semmangudi Srinivasa Iyer. Sadas President: Hon. Sri B. Gopala Reddi.

**Competitions 8 A. M. Discussions 12 Noon. Concerts 3-30—11-30 P. M.**

**SRI SUNDARESWARAR HALL, MYLAPORE**

CONCERTS PROGRAMME D. V.

---

**Opening Day, Tuesday, 23rd 6 P. M.**

T. V. Vasanta, Komalavalli & Hamsadamayanti

| 3-30 P. M. | 5-30 P. M. | 9-30 P. M. |
|---|---|---|
| **WEDNESDAY 24th DECEMBER** | | |
| S. Srinivasa Rao, Trivandrum Hariharan & P. A. Venkataraman | Semmangudi, Papa & Palghat Mani | |
| **THURSDAY 25th DECEMBER** | | |
| Ennapadam Ramachandran Venkatachalam & Somanna | G. N. B., Rajamanickam & Palni | K. S. Narayanaswami-Vina |
| **FRIDAY 26th DECEMBER** | | |
| Vadakancheri Mani, Visvanatha Iyer & Lakshminarayanan | Madura Mani, Govindaraju & Murugabhupathy | |
| **SATURDAY 27th DECEMBER** | | |
| T. R. Balasubramanian, Nellai Mani & Devarajan | Ariyakudi, Papa & Palghat Mani | T. N. Rajaratnam-Nagaswara Nachiyarcoil-Raghavan-Thavil |
| **SUNDAY 28th DECEMBER** | | |
| Savitriammal-Gottuvadyam Jagannathan-Mridangam | M. S. S., Chowdiah, Ramanathan & Alangudi | |
| **MONDAY 29th DECEMBER** | | |
| Somasundram, T. K. Jayarama Iyer, Eswaran | Alathur Bros., Krishnan & Raghu | Tara Choudhri-Solo (Indian Dance Recitals) |
| **TUESDAY 30th DECEMBER** | | |
| Navaneetham-Flute, M. S. Pattammal & Hamsadamayanti | D. K. Pattammal, Tiruvellore Subramanian & Tanjore Krishnamurthi Rao | Brinda-Mukta & Abhirami |
| **WEDNESDAY 31st DECEMBER** | | |
| Sadas | Chembai, Chowdiah & Palni | Venkatasami Naidu-Violin, Tuni Venkataraju Mridangam |

**THURSDAY 1st JANUARY' 1948**

(8 A. M. Members' Day & Reception)

| 3-30 P. M. | 6 P. M. |
|---|---|
| Sattur, Sundaresa Iyer & Nataraja-Sundaram | Anandi & Radha-Bharatanatyam (M. S. S. will sing Padams) |

---

LOUD SPEAKER — TRICHY RADIO SALES & SERVICE

SPECIAL SEATS FOR PATRONS, DONORS AND CONTRIBUTORS TO THE BUILDING FUND. To apply at No. 6 North Mada Street, Mylapore.

SEASON TICKETS:— Limited number of seats. Speial Reserved Rs. 80 (Pit). Rs 70 (Dais) Bookings at the office of the Academy only. First Class Rs. 35. Reservation Rs. 5 and Second Class R. 25 Reservation at the Academy Office only.

TICKETS CAN BE HAD FROM:— Office of the Music Academy, Madras-14. Office of the Mylai Sangita Sabha, Madras - 4. Rasika Ranjani Sabha, Madras - 4. South Indian Music Emporium, 3, Broadway.

---

**Steps are being taken to arrange bus service for night performances.**

கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 18

# என்ன சேதி?

## பெருமைக்கு இழுக்கு

‘தன் ஊரில் விலையாகாத மாடா அயலூரில் விலையாகப் போகிறது?’’ என்று சொல்லுவது உண்டு. அதுபோலவே, தன் சொந்த நாட்டிலே சுதந்திர மில்லாதவர்கள் அயல் நாடுகளில் செளக்கிய மடைவது எவ்விதம் சாத்தியமாகும்? இன்று வெளி நாடுகளில் இந்தியர்கள் படும் கஷ்டங்களுக்கெல்லாம் ஆதிகாரணம் அவர்கள் சுதந்திரம் இழந்திருந்தது தான். குறிப்பாக, கடல் கடந்து சென்றுள்ள இந்தியத் தொழிலாளர்களின் கஷ்டம் சகிக்க முடியாதது. அவர்கள் வறுமையிலே பிறக்கின்றார்கள், வறுமையிலே வாழ்கின்றார்கள், வறுமையிலேயே மடிகின்றார்கள். அவர்களின் வறுமை வாழையடி வாழையாக வளருகிறது! இந்தியாவின் வறுமை ஒருபுறமிருக்க, இந்தியத் தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றும், மேற்படி வறுமையின் பிரதிபிம்பங்களாக விளங்கி வருவது நம் பாரத நாட்டின் பெருமைக்கே இழுக்காகும். இத்தகைய நிலைமைக்கு ஏதாவது பரிகாரம் தேடுவதற்காகச் சென்னையில் ‘இந்தியர் கலோனியல் மகாநாடு’ என்று ஒரு கூட்டம் சென்ற வாரம் நிகழ்ந்தது. இந்தியா சுதந்திரம் பெற்றதுடன், இந்தியத் தொழிலாளர்களும் இதரர்களும் சென்றுள்ள பல நாடுகளும் இன்று சுதந்திரம் பெற்று வருவதால், அவர்களின் எதிர்கால நிலைமை என்ன வென்பதில் மேற்படி மகாநாடு கவனம் செலுத்தி யிருப்பது முற்றிலும் சந்தர்ப்பப் பொருத்தமாகும்.

கடல் கடந்து சென்றுள்ள இந்தியர்களின் மூலதனம், இந்தியத் தொழிலாளர்களின் உழைப்பு எல்லாவற்றுக்குமே இன்று ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன் இந்தியாவை ஆட்சி புரிந்து வந்த அன்னியர்கள், இந்தியர்களின் கஷ்ட நஷ்டங்கள் சம்பந்தப்பட்ட வரையில் தாமரையிலைத் தண்ணீரைப் போல எவ்வித தொடர்பும் இராமல் காலம் தள்ளி வந்தார்கள். ஆனால், சுதந்திர இந்திய சர்க்கார் இனி அவ்விஷயத்தில் அலட்சியமாக இருக்க முடியுமா? எனவே, இந்திய சர்க்கார் உடனடியாகச் சமாளிக்க வேண்டிய பிரச்னைகளுள், கடல் கடந்துள்ள இந்தியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதும் ஒன்றாகும். இவ் விஷயத்தை வலியுறுத்தி மேற்படி மகாநாட்டில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேறி யிருக்கின்றன.

## வாழ்த்துகிறோம்!

இந்தியாவையும் பர்மாவையும் போல் இலங்கையும் சுதந்திரம் பெற்றதைக் குறித்து, இலங்கையர்களை மனமார வாழ்த்துகிறோம். சுதந்திரம் பெற்றதற்கு அறிகுறியாக இலங்கை பார்லிமெண்டின் முதல் கூட்டமும் சென்ற செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகி யிருக்கிறது. சரித்திரம், பண்பாடு, பூகோள அமைப்பு முதலிய பல விதத்திலும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. எனவே, இலங்கை சுதந்திரம் பெறுவது இந்தியாவின் எதிர்கால க்ஷேமத்துக்கும் முக்கியமாகும். மேற்கூறிய விதம் இந்தியாவுடன் பல விதத்திலும் நெருங்கிய சம்பந்தமுள்ள இலங்கையில் கூட, ஏனோ இந்தியர்கள் மீது விரோத பாவம் வளர்ந்து வந்திருப்பது வருந்தத் தக்க விஷயமாகும். இலங்கையின் பொருளாதார சுபிட்சத்துக்கு இந்தியத் தொழிலாளர்களின் சலியா உழைப்புதான் காரணம் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை; பல இலங்கைப் பிரமுகர்களும் ஒப்புக்கொண்ட உண்மை. அப்படியிருந்தும்

அங்கு இந்தியர்கள் நியாயமான உரிமைகளைப் பெற முடியவில்லை யென்பது விபரீதமான நிலைமை யல்லவா? எனவே, சுதந்திர இலங்கை சர்க்கார் இனி அத்தகைய நிலைமையை நீடிக்க விடமாட்டார்களென நம்புகிறோம். இலங்கை அவ்வாறு செய்வதன் மூலம் சுதந்திர இந்தியாவின் நட்பைப் பெறுமென்பது நிச்சயம்.


இந்தியாவுக்கும் இலங்கைக்கு முள்ள உறவை இரு நாடுகளுக்கும் திருப்தியை அளிக்கக்கூடிய விதத்தால் ஒழுங்கு செய்யப்படுமென்று சமீபத்தில் இலங்கைப் பிரதம மந்திரி அறிவித்தார். இரு நாடுகளுக்குள்ளும் சமரசப் பேச்சு ஆரம்பமாகப் போகிறதென்று இந்தியா பார்லிமெண்டிலும் பண்டித ஜவாஹர்லால் நேரு குறிப்பிட்டிருக்கிறார். இலங்கை பார்லிமெண்டு ஆரம்ப விழாவின்போது, இலங்கை கவர்னரும் இந்தியர்கள் விஷயத்தில் சிரத்தை காட்டிப் பேசியிருப்பது பாராட்டுதற் குரியது. எனவே, இந்தியர்களுக்கு நியாயமான பிரஜா உரிமைகளை அளிப்பதே சுதந்திர இலங்கையின் முதலாவது காரியமாய் இருக்குமாக!

## புதிய போர்வை, ஆனால்...!

ஜாதி, மதக் கோட்டைகளெல்லாம் தகர்ந்து சர்வதேச சகோதரத்துவ உணர்ச்சி வளர்ந்துவரும் இக்காலத்தில் மதத்தை ஆதாரமாகக்கொண்ட கட்சியோ, சர்க்காரோ எவ்வளவு காலத்துக்கு நிலைக்க முடியும்? அத்தகைய கட்சி அல்லது சர்க்காரால் ஏற்படக்கூடிய இன்னல்கள் கொடியவை என்பதும் கணக்கற்றவை என்பதும் கண் முன் தெரிந்து வருகின்றன. இந்த உண்மையை இதுவரை பாகிஸ்தானியர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. ஆனால், சென்ற சில மாதங்களாக ஏற்பட்ட அனுபவங்களின் காரணமாக அவர்கள் கூட அந்த உண்மையை உணர ஆரம்பித்திருக்கிறார்களோ வென்றே நினைக்க வேண்டியிருக்கிறது.


அடுத்த மாதம் கராச்சியில் நடக்கப் போகும் முஸ்லிம் லீக் கூட்டத்தில் அகில இந்திய முஸ்லிம் லீகைக் கலைத்து விடப் போகிறார்களாம். அதன் ஸ்தானத்தில் தேசிய பாகிஸ்தான் லீக் என ஒன்றை ஏற்படுத்தப் போகிறார்களாம். புதிய லீகில், ஜாதி மத வேற்றுமை எதுவுமின்றிப் பாகிஸ்தானிலுள்ள சகலருக்கும் சேர உரிமை இருக்கு மென்றும் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. இது உண்மையாயின் வரவேற்கத் தக்கதுதான். தங்களுடைய ஸ்தாபனத்தின் பெயரை மாற்றும் லீகர்கள், தங்களுடைய மனோ நிலையையும் மாற்றிக் கொள்ளுவார்களாயின் அவர்களுக்கும் நன்மை, பாகிஸ்தானுக்கும் நன்மை, இந்தியாவுக்கும் நன்மையாகும். ஆனால், அவ்விதமின்றிப் புதிய போர்வை — பழைய உருவம் என்ற கதையாகி விட்டால் என்ன செய்வது?

# நிகழ்ச்சிச் சித்திரம்




**கை கொடுப்பது யார்?**

சிந்து மாகாண மந்திரி சபையில் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் ஸ்தானம் அளிப்பதாக சிந்து கவர்னர் சொல்லுகிறார்.





**பாகிஸ்தான் வானொலிப் பிரசாரம்.**

- சாஸ்திரி




மற்றொரு குத்துச்சண்டை!
லண்டனில் நடக்கும் நான்கு வல்லரசுகள் மகாநாட்டின் முடிவு என்னவென்பதைக் குறித்து இப்பொழுதே ஜோஸ்யம் சொல்லி விடலாம் - ஓர் அரசியல் நிருபர்
பெவின்
மார்ஷல்
மாலடாவ்

சென்னை மாகாணத்திலும் புல்லுருவி!
சென்னை முஸ்லிம் லீகர்கள் மாப்பிளாஸ்தான் வேண்டு மென்று இந்தியா பார்லிமெண்டில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்போவதாக அறிவித்திருக் கிறார்கள்.
மாப்பிளாஸ்தான் கோரிக்கை

# மூட நம்பிக்கை!


பார்ப்போம் ஒரு கை! இன்னும் ஒரு வருஷத்துக்குள் நான் பெரிய பயில்வானாகி விட மாட்டேனா?
இந்தியா– ஹைதராபாத் ஒரு வருஷ ஒப்பந்தம்
இந்தியா
SHASTRY

# வேதாளம் இறங்கியது!

'உலகத்திலே எல்லாவற்றையும் காட்டிலும் அதிசயமானது எது?' என்று கேட்டான் ஒரு யக்ஷன்.

'இப்புவியில் பிறப்பவன் ஒரு நாள் இறப்பது நிச்சயம். பிறப்பும் இறப்பும் மனிதன் தினசரி கண்ணால் பார்க்கும் சம்பவங்களாகும். அப்படியிருந்தும், தான் மாத்திரம் இவ்வுலகில் சிரஞ்சீவியாக இருக்கப் போவதாய் நினைத்துக் கொண்டு மனிதன் அக்கிரமமான காரியங்களைச் செய்கிறானே, அதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகும்' என்று பதிலளித்தார் தர்மபுத்திரர்.

எதேச்சாதிகாரம் ஒழிந்தே தீரும் என்பதைச் சென்ற கால சம்பவங்களும் நிகழ்கால சம்பவங்களும் சந்தேகத்துக்கு இடமின்றிக் காட்டி வருகின்றன.

அற்பாயுள் கொண்ட எதேச்சாதிகார வெறியை விட்டுவிட்டு, சிரஞ்சீவியான ஜனநாயக முறையைக் கைக்கொண்டாலன்றி, தங்கள் பாடு திண்டாட்டமாகி விடுமென்பதை மகா வல்லமை பொருந்திய அரசுகளும் உணர்ந்து கொண்டிருக்கின்றன.

தாங்கள் வெற்றி கொண்ட நாடுகளில் கூட எதேச்சாதிகாரத்துக்கோ, சர்வாதிகாரத்துக்கோ அடிகோல வல்லரசுகள் விரும்பவில்லை.

அமெரிக்கா பிலிப்பைனுக்கும், பிரிட்டன் தன்னுடைய ஆதிக்கத்தின் கீழிருந்த பல நாடுகளுக்கும் சுதந்திரம் அளித்து விட்டன.

மூடியரசின் கீழுள்ள நாடுகளில் கூட உண்மையில் குடிகளின் ஆட்சி முறைதான் நடைபெற்று வருகிறது.

ஆனால், உலகம் முழுதும் பரவி வரும் ஜனநாயகப் புரட்சிப் புயலின் ஜம்பம், நமது நிஜாம் மன்னர் இருக்கின்றாரே அவரிடத்தில் மாத்திரம் சாயவில்லை என்றே தோன்றுகிறது!

மீண்டும் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டு தொல்லை விளைவித்ததல்லவா?

நிஜாம் சமஸ்தானத்தின் கதையும் அவ்விதமேதான் இருந்து வந்தது.

குட்டி சமஸ்தானங்களே சிறிது காலம் வரையில் தங்களுடைய கைவரிசையைக் காட்டி வந்திருக்கும் போது, நிலப்பரப்பிலும், வருமானத்திலும், எதேச்சாதிகார தர்பாரிலும் முதல் ஸ்தானம் வகிக்கும் நிஜாம் சமஸ்தானம் நீண்ட காலம் தன் கைவரிசையைக் காட்டியது எதிர்பாராத விஷயமல்ல.

அதனால்தான் மற்ற சமஸ்தானங்களைக் காட்டிலும் நிஜாம் சமஸ்தான சர்க்காரிடம் அதிகப் பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டியிருந்தது என்று சர்தார் பட்டேல் கூறியிருக்கிறார்.

* * *

நிஜாம் மன்னரின், — அவரை ஆட்டிவைக்கும் வகுப்பு வெறி ஸ்தாபனத்தின் பிடிவாதம் காரணமாக மேற்படி சமஸ்தானத்தின் பிரதம மந்திரிகள் ஒருவர் பின்னொருவராக ராஜினமா செய்தனர்.

அவரது ஆலோசகர்களாக இருந்த அரசியல் நிபுணர்கள், சுமார் எழுபது என்பது தடவைகளுக்கு மேல் டில்லிக்கும் ஹைதராபாத்துக்குமாகப் பறந்து சென்றும் பலனின்றி, இறுதியில் சமஸ்தானத்தையே துறந்து சென்று விட்டார்கள்!

நிஜாம் சர்க்காரின் பிடிவாதத்தைக் கண்டு தேசமே பொறுமை யிழந்தாலும், இந்திய சர்க்காரும் சர்தார் பட்டேலும் மாத்திரம் பொறுமையிழக்கவில்லை.

இருந்தாலும் சென்ற பல வாரங்களாக நடந்து வந்த அலங்கோல

நாடகம் இன்னும் எவ்வளவு காலம் நீடித்துக்கொண்டு போவது? அதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டாமா?

அதை ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டு மென்ற நோக்கத்துடனேயே சர்தார் பட்டேல், இந்த மாதம் 25-ந் தேதிக்குப் பிறகு ஹைதராபாத்துடன் எவ்வித சமரசப் பேச்சும் நடத்துவ தில்லை யென்று நிர்ணயம் செய்தார்.

காலவரையறையின்றி தங்களுடைய கபட நாடகத்தைத் தொடர்ந்து நடத்தி வரலாமென்று நினைத்துக் கொண் டிருந்த நிஜாமுக்கு, சர்தாரின் எச்சரிக்கை பெரிய அதிர்ச்சியைக் கொடுத் திருக்கு மென்பதில் சந்தேகமில்லை.

மரத்தின் உச்சியிலிருந்து வேதாளம் கடைசியாகக் கீழே இறங்கி யிருப் பதற்கு அதுதான் காரணம்!

• • •

**ப**லாத்காரத்தின் மூலம் தான் பைசல் செய்ய முடியுமென்று தோன் றிய பிரச்னை, சமரசமாக முடிந்திருப் பது சந்தோஷப்பட வேண்டிய விஷயமே.

இந்திய சர்க்காருக்கும் ஹைதராபாத் துக்கும் தற்காலிகமாக ஒரு சமரசம் ஏற்பட்டு விட்டது!

சென்ற தடவை அத்தகைய ஒப்பந்த மொன்று ஏற்பட்டாலும், நிஜாம் மன்னர் கையெழுத்திடும் தருவாயில் அதற்கு ஆபத்து நேர்ந்து விட்டது!

ஆனால், இம்முறை அத்தகைய ஆபத்து எதுவும் ஏற்படாதென்றே கருதுகிறோம்.

இப்போதைய சமரச ஷரத்துக்களைக் காட்டிலும் சமரசம் ஏற்பட்டிருக்கிறது என்பது தான் மிக மிக முக்கியமாகும்.

எனவே, சர்தார் பட்டேல் குறிப் பிட்டிருப்பது போல், ஹைதராபாத் பிரச்னை மிகவும் பொறுமையுடனும், நாஸுக்காகவும், ராஜதந்திரத்துடனும் சமாளிக்கப்பட் டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

ஜுனாகாத், நீலகிரி சமஸ்தானங் களின் கதி தனக்கு வருமுன், நிஜாம் சமஸ்தானம் தன்னுடைய கண்மூடி தர்பாரைக் கைவிட்டது புத்திசாலித் தனமேயாகும்.

தற்காலிகமாக ஏற்பட்டுள்ள மேற் படி ஒப்பந்தமானது, நிரந்தரமான ஒரு நல்ல முடிவுக்கு அஸ்திவாரமாக அமையு மென்று நம்புகிறோம்.

**நி**கராறு செய்து வந்த திருவாங்கூர், மைசூர், ஹைதராபாத் முதலிய பெரிய பெரிய சமஸ்தானங்கள் கூட வழிக்கு வந்துவிட்டதால், இனி மற்ற சமஸ் தானங்களின் மன்னர்கள் 'சுதந்திர கர்ஜனை' புரிவது மடத்தனமான செய்கை யென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த சில குட்டி சமஸ்தானங்கள் ஒன்று சேர்ந்து கொண்டு இன்னும் நகராறு செய்து வருகின்றன.

சமீபத்தில் நீலகிரி சமஸ்தானத்தின் நிர்வாகத்தை, மேற்படி சமஸ்தான மன்னரின் வேண்டுகோளுக் கிணங்க இந்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டும் படி நேர்ந்ததிலிருந்து, குட்டிச் சமஸ் தான கோஷ்டியைச் சேர்ந்த முப்பது சமஸ்தானாதிபதிகள் மகாநாடு கூடி, தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றி யோசித்திருக்கிறார்கள்.

அப்போது அத்கார் என்ற ஒரு சமஸ்தானத்தின் மன்னர் தமது சகோ தர மன்னர்களுக்குப் புத்திமதி கூறி யுள்ளார்:

"நம்முடைய எதேச்சாதிகார தர்பா ருக்கு இனி இடமில்லை.

"மன்னர்களுக்கான உரிமைகளைக் கோரும் நாம், பிரஜைகள் விஷயத்தில் நமது கடமைகளைச் செய்யத் தவறி விட்டோம்.

"எனவே, இனியாவது நாம் சிறிதும் தாமதமின்றி நம்முடைய சமஸ்தானங் களில் பொறுப்பாட்சியை ஏற்படுத்த வேண்டும்.

"ஜனப் பிரதிநிதிகளிடம் அதிகா ரத்தை ஒப்புவிக்க வேண்டும்.

"நம்முடைய பூர்வாசிரமங்களைக் கவனிக்கும்போது, ஜனங்களின் தலை வர்களாக இருக்க நாம் தகுதியற்ற வர்கள் என்பது நிரூபணமாகிறது.

"எனவே, நமக்கும் ஜனங்களுக்கும் ஐக்கியபாவம் ஏற்பட்டாலன்றி, நம் முடைய அதிகாரம் மாத்திரமல்ல, நாமே இவ்வுலகிலிருந்து மறைந்து விடும்படி நேரும்.

"ஜனங்களின் நல்லெண்ணம்தான் நம்முடைய உயிர்நாடியாகும்."

அத்கார் சமஸ்தானாதிபதியைப் போல் வேறெவரும் இதுவரை இந்திய மன்னர்களின் நிலைமையை இவ்வளவு தெளிவாகவும், தயவு தாட்சண்ய மின்றியும் எடுத்துக் கூறியதில்லை.

ஆகையால், நிஜாம் மன்னரின் ஞானோதயமும், அத்கார் சமஸ்தானதி

பதியின் அறிவுரையும் இந்திய சமஸ்தானங்களின் பிரச்னையையே கடைசியாக ஒரு முடிவுக்குக் கொண்டு வருமென எதிர்பார்க்கலாம்.

•  •  •

சமஸ்தானப் பிரச்னைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, காஷ்மீர நிலைமையை யொட்டிப் பண்டித ஜவாஹர்லால் நேரு கூறியுள்ள விவரங்களையும் குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை.

காஷ்மீரத்தில் இந்திய சர்க்கார் தலையிட்டது முற்றிலும் நேர்மையான காரியமென்பதையும், உலகத்தின் முன்னிலையில் நாம் எந்தச் சமயத்திலும் அதை ஸ்தாபிக்கத் தயார் என்றும் ஜவாஹர்லால்ஜி கூறியிருப்பது, பாகிஸ்தான் புளுகுப் பிரசாரத்துக்குச் சரியான பதிலாகும்.

காஷ்மீரத்தில் கொள்ளைக்காரர்கள் படையெடுத்ததற்குப் பாகிஸ்தான் சர்க்கார்தான் காரணஸ்தர்களென்பதை ஆதார பூர்வமான தஸ்தாவேஜுகளுடன் நிரூபிக்கத் தயார் என்றும் பண்டித நேரு கூறியிருக்கிறார்.

ஏனெனில், காஷ்மீரத்தின்மீது படையெடுக்கத் திட்டம் வகுத்தவர்களும், கொள்ளைக்காரர்களுக்குப் போர்க் கருவிகள் கொடுத்து உதவியவர்களும் பாகிஸ்தான் சர்க்கார்தான் என்பது இதற்குமுன் தஸ்தாவேஜுகளின் மூலமாகவும், காஷ்மீர் போர்முனையில் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகளின் மூலமாகவும் வெளியாகியுள்ளன.

ஆனால், இப்போது அதைப் பாகிஸ்தான் சர்க்காரே மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்தியாவின் பிரதம மந்திரி அம்பலப் படுத்தி யிருக்கிறார்.

காஷ்மீர் போர்ப் படலத்தின் வரலாறு மிகவும் உருக்கமானது:

பொருளாதாரத் துறைகளில் காஷ்மீரத்துக்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்தும் கூட, காஷ்மீரத்தை இந்தியாவுடன் சேரும்படி வற்புறுத்த இந்திய சர்க்கார் விரும்பவில்லை. ஆனால், இதற்கு மாறாகப் பாகிஸ்தான் சர்க்கார், பலாத்காரத்தினால் காஷ்மீரத்தைப் பாகிஸ்தானுடன் சேருமாறு செய்ய முற்பட்டனர். பாகிஸ்தான் சர்க்காரின் தூண்டுதலால் எல்லைப்புற மலைவாசிகள் காஷ்மீரத்தின் மீது படையெடுத்தார்கள்; கிராமங்களை எரித்தார்கள்; ஜனங்களை ஆயிரக் கணக்கில் கொன்று குவித்தார்கள்.

ஆனால், நிலைமை சகிக்க முடியாமல் காஷ்மீர மகாராஜா இந்தியாவின் உதவியைக் கோரிய பின்னரே, இந்தியப் படைகள் காஷ்மீர சமஸ்தானத்துக்கு உதவி புரியச் சென்றன.

இந்தியப் படைகள் இன்னும் இருபத்து நான்கு மணி நேரம் தாமதித்துக் காஷ்மீரத்துக்குச் சென்றிருக்குமாயின், பல நகரங்கள் கொள்ளைக்காரர்களால் அழிந்தது போன்று, காஷ்மீரத்தின் அழகிய தலைநகரான ஸ்ரீநகரும் அழிந்து போயிருக்கும்.

•  •  •

இவ் விவரங்களையெல்லாம் பண்டித நேரு இந்திய பார்லிமென்டான அரசியல் நிர்ணய மகாசபையில் ஆதியோடந்தமாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

காஷ்மீரத்தில் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டதாகப் பாகிஸ்தான் சர்க்கார் பிரசாரம் செய்வது முழுப் புளுகு என்பதைப் பண்டித நேருவும், காஷ்மீரத்தின் இணையற்ற தலைவரான ஷேக் அப்துல்லாவும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

முஸ்லிம்களைப் பாதுகாப்பதாக வந்த கொள்ளைக் கூட்டம் கிராமம் கிராமமாக முஸ்லிம்களையே படுகொலை செய்திருக்கிறது.

இஸ்லாத்தைப் பாதுகாப்பதாக வந்த அதே கொள்ளைக் கூட்டம், மசூதிகளில் கூட செய்யத்தகாத அட்டூழியங்களைச் செய்திருக்கிற தென்பதை ஷேக் அப்துல்லா, கேட்போர் மனம் பதறித் துடிக்குமாறு விவரித்திருக்கிறார்.

காஷ்மீரத்திலிருந்து கொள்ளைக்காரர்களையெல்லாம் அடியோடு விரட்டிய பின், காஷ்மீர ஜனங்களுக்குத் தங்களுடைய எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ள உரிமையுண்டு என்பதை நேருஜி மறுக்கவில்லை.

ஆனால், அவ்விஷயமாகப் பாகிஸ்தான் சர்க்கார் எவ்வித சூழ்ச்சியும் செய்ய இடங் கொடுக்காமல், பாரபட்சமற்ற ஒரு நீதிச் சபையின் மேற்பார்வையில் ஜனங்கள் தங்களுடைய முடிவைத் தெரிவிக்கச் சந்தர்ப்பமளிக்க வேண்டும் என்பதே பண்டித நேருவின் யோசனையாகும்.

நேர்மைப் புத்தி படைத்தவர்கள், இவ்வரிய தர்ம நியாயமான யோசனையை ஏற்றுக்கொள்ளத் தயங்கவே மாட்டார்கள்.

# இல்லற ஞானம்

எஸ். வி. எஸ்.

என்னுடன் ஒரு அறையில் என் நண்பன் சகஸ்ரநாமம், பிரம்மச்சாரியாக இருந்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் காலை குளிருக்கு இழுத்துப் போர்த்திக் கொண்டு அவன் நெடுநேரம் தூங்கிவிட்டான். பிறகு எழுந்திருந்து மணியைப் பார்த்தான். சரியாக எட்டு. 'த்சொ த்சொ' என்று சொல்லிக் கொண்டே கையை உதறினான்.

"என்னடா?" என்றேன்.

"கல்யாணம் பண்ணிக் கொள்ளாதது எவ்வளவு பெரிய தவறு என்று இப்பொழுது தான் தெரிகிறது!" என்றான்.

"என்ன அப்படி நேர்ந்து விட்டது?" என்றேன்.

"இன்றைக்குக் காலையிலே ஒருவனைப் பார்க்க வருவதாகச் சொல்லியிருந்தேன். ஆனால் இதோ பார், தூங்கிப் போய் எட்டு மணிக்கு எழுந்திருக்கிறேன். ஒரு பெண்டாட்டி இருந்தால் சரியாக ஆறரை மணிக்கு என்னை எழுப்பியிருப்பாள் அல்லவா!" என்று அங்கலாய்த்தான்.

இன்னொரு நாள் நான் ஒரு டஜன் மலைப் பழம் வாங்கிக் கொண்டு போனேன். அதில் அரை டஜனை எடுத்து அவன் அரை விநாடியில் தீர்த்துவிட்டு, "என்ன இருந்தாலும் நீ கொடுத்த பழத்தையே அவள் தன் மணிக் கையினால் கொடுத்திருந்தால் எவ்வளவு ருசியாக இருக்கும் தெரியுமா!" என்றான்.

இதைக் கேட்டதும் பழம் வாங்கிக் கொடுத்த எனக்கு எப்படி இருந்திருக்கும்!

இப்படி எத்தனையோ கோணங்களிலிருந்து தன் வாழ்க்கையைப் பரிசீலனை செய்து பார்த்த பிறகு தான் சகஸ்ரநாமம் கல்யாணம் பண்ணிக் கொண்டான்!

தம்பதி சமேதமாக ஜாம் ஜாம் என்று அவன் வாழ்க்கை நடத்த ஆரம்பித்து விட்டதும், இவனுடைய இல்லற வாழ்க்கைக்கு இனி நாம் இடையூறு செய்யக் கூடாது என்று நான் அவன் வீட்டுக்குப் போவதை நிறுத்தி விட்டேன்.

ஒரு நாள் அகஸ்மாத்தாய் அவன் என்னைத் தெருவில் சந்தித்த போது, "என்னப்பா, வீட்டுப் பக்கமே வருகிறதில்லையே! கல்யாணம் பண்ணிக் கொண்டதிலிருந்து நம்ம சிநேகிதர்களெல்லாம் என்னை ஒரே அடியாக இப்படி 'பாய்காட்' பண்ண ஆரம்பித்து விட்டார்களே! சே, சே! கல்யாணம் பண்ணிக் கொண்டதே பெரிய தவறாகப் போய்விட்டது!" என்றான்.

மற்றொரு நாள் காலை எட்டு மணிக்கு என்னை சகஸ்ரநாமம் என் வீட்டில் வந்து



சம்பத் (ஆச்சரியத்துடன்):—என்ன, சங்கர்! இங்கிலீஷ் பரீட்சையைப் பத்தே நிமிஷத்தில் எழுதிக் கொடுத்து விட்டு வெளியே வந்து விட்டாயே!

சங்கர்:—ஆமாம், 'ஷார்ட் ஹாண்'டிலேயே எழுதிக் கொடுத்து விட்டேன், அதனால்தான் இவ்வளவு சீக்கிரத்தில் முடிந்து விட்டது!

சந்திப்பதாகச் சொல்லியிருந்தான். நான் இவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். சரியாக மணி ஒன்பதிருக்கும். சகஸ்ரநாமம் வந்தான்.

“ஏன் இத்தனை நாழிகை?” என்று நான் கேட்காமலே, அவன் சொன்னான்:

“சே, சே! கல்யாணம் பண்ணிக் கொண்டது பெரிய உபத்திரவமாகப் போய் விட்டது. ‘எழு மணிக்கு எழுப்படி’ என்று சொல்லிவிட்டுப் படுத்துக் கொண்டேன். காலையில் எழுந்திருந்து மணி பார்க்கிறேன்—சரியாக எட்டு! ‘ஏன் என்னை எழுப்பவில்லை எழு மணிக்கு?’ என்றால், ‘அசந்து தூங்கிக் கொண்டிருந்தீர்கள், எப்படி எழுப்புகிறது என்று சும்மா இருந்து விட்டேன்’ என்கிறாள்!”

இவ்விதம் சகஸ்ரநாமம் இல்லற வாழ்க்கையில் தான் புகுந்ததின் மடமையைக் குறித்து வருந்துவதுபோலெல்லாம், பிரம்மசர்ய வாழ்க்கையைப் பழித்த சகஸ்ரநாமமா இப்படிச் சொல்லுகிறான் என்று எனக்குத் தோன்றுகிறது. இருந்தாலும் அவனும் உண்மை; அவன் சொல்வதும் உண்மையாக இருக்கிறதே

இந்த சகஸ்ரநாமத்தை நினைக்கும் போது எனக்குக் கிரேக்க ஞானி ஸோக்ரதர் சொன்னதும் ஞாபகம் வருகிறது.

மனைவியினால் கஷ்டப்பட்ட மகானுபாவர்களில் ஸோக்ரதரும் ஒருவர் என்பது பலருக்குத் தெரியும். ஒரு சமயம் அவர் தம் நண்பர்களுடன் திண்ணையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த போது, அவர் மனைவி வீட்டுக்குள், “என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு, எப்போ பார்த்தாலும்!” என்று ஏதேதோ சொல்லி, ஸோக்ரதரை வைது கொண்டிருந்தாளாம்.

இதைக் கேட்ட ஒரு நண்பர், “உள்ளே என்ன சத்தம்?” என்று ஸோக்ரதரைக் கேட்டாராம்.

“ஒன்றுமில்லை; இடிச் சத்தம்!” என்றாராம் ஸோக்ரதர்.

கொஞ்ச நாழிகை கழிந்து, அந்த அம்மாள் மாடியிலிருந்து ஒரு வாளி தண்ணீரை எடுத்து ஸோக்ரதர் பேரிலும், அவருடைய நண்பர்கள் மேலேயும் கொட்டினாளாம்.

“இது என்ன தண்ணீர்?” என்று கேட்டார்களாம் நண்பர்கள்.


“இடி இடித்த மேகம் இப்போது மழையைப் பொழிகிறது!” என்றாராம் ஸோக்ரதர்.

இப்படி மனைவியினால் கஷ்டப்பட்ட ஸோக்ரதர், இந்த இல்லற வாழ்க்கையை எவ்வளவு வெறுத்திருக்க வேண்டும்! கல்யாணத்தைப்பற்றி அவரை அபிப்பிராயம் கேட்டால் ‘மகனே! கல்யாணமே பண்ணிக் கொள்ளாதே!’ என்றல்லவா சொல்லியிருக்க வேண்டும்?

ஆனால் வாஸ்தவத்தில் அவர் என்ன சொல்லியிருக்கிறாராம், தெரியுமா?

“மகனே! நீ கல்யாணம் பண்ணிக் கொண்டாலும், வருத்தப்படுவாய்; பண்ணிக் கொள்ளாவிட்டாலும் வருத்தப் படுவாய். இதில் எப்படி வருத்தப்பட்டால் என்ன?” என்று சொல்லியிருக்கிறாராம்!

எப்படி அந்த ஞானியின் இல்லற ஞானம்? எப்படி சகஸ்ரநாமத்தின் அனுபவ ஞானம்?




★

“ஐயையோ! உன் ஆளைப் பாரப்பா! குடுமி வைத்து க்ஷவரம் செய்யச் சொன்னேன். அவன் பாட்டுக்கு மொட்டையே அடிச்சுட்டான்!”

“அடடா! மன்னிக்கணுங்கோ! அவன் இப்பத்தான் திருப்பதியிலே இருந்து புதுசா வந்திருக்கான்!”

★



# அருவிக்கரை பங்களா

தாபன்

குற்றாலம் அருவியை அடுத்தாற்போல் ஒரு சிறிய பங்களா இருக்கிறது. அது சிப்பிக் கல் சுண்ணாம்பினால் வெள்ளை யடிக்கப்பட்டுத் தூய வெண்ணிறத்தோடு விளங்கும். சுற்றிலும் ஒட்டி மாமரங்களும் பலா மரங்களும் நிறைந்திருக்கும். முன்புறத்தில் வாசல் வரை வரம்பு கட்டியது போல் வெட்டி விடப்பட்ட சவுக்குச் செடிகள். அவற்றை ஒட்டி வெள்ளைக் கற்கள் வரிசையாய்ப் பதிக்கப்பட்டிருக்கும். பாதையை விட்டு விலகினால் அடுக்குமல்லி, ரோஜா, அடுக்கரளி, செண்பகப்பூ, செம்பருத்தி முதலிய செடிகள் மலர்களை வாரிச் சொரிந்த வண்ணம் நிற்கும்.

போன வருஷம் சாரலுக்காக நானும் என் நண்பர்களும் குற்றாலம் சென்றிருந்தோம். ஏகமான கூட்டம். தங்குவதற்கு இடமே கிடைக்கவில்லை. ஒவ்வொரு மண்டபத்திலும், பங்களாவிலும் நாலைந்து குடும்பங்கள் சேர்ந்து தங்க நேரிட்டிருந்தது. இடத்துக்காகச் சுற்றி அலைந்து கொண்டே வரும்போது, இந்த பங்களா மட்டும் பூட்டிக் கிடப்பதைப் பார்த்தோம். 'இதை விட்டுவிடக் கூடாது' என்று தீர்மானித்துக் கொண்டு அந்தப் பங்களாவைச் சுற்றிச் சுற்றி வந்தோம்.

"யாரையா நீங்கள்? என்ன வேண்டும்?" என்று கேட்டுக்கொண்டு, எங்களை நோக்கி வந்தான் ஒரு வழுக்கைத் தலை மனிதன்.

"இந்தப் பங்களா யாருடையது? உனக்குத் தெரியுமா?" என்றேன்.

"தெரியும்; அதுக்கென்ன இப்போ?"

"இதை வாடகைக்குக் கேட்கலாமென்று உத்தேசம். இந்தப் பங்களாக்காரர் எங்கே இருக்கிறார்? அவரை நாங்கள் பார்க்க வேண்டும்."

"அவரைப் பார்க்க வேண்டுமானால் நீங்கள் இப்படியே போய், இப்படித் திரும்பி, இப்படி வர வேண்டும்!" என்று தன் கைவிரலை வடக்கே காட்டி, மேலே உயர்த்தி, ஆகாசத்துக்குக் கொண்டு வந்தான் அவன்!

"என்னப்பா, அதிசயமாயிருக்கிறதே!" என்றேன்.

"அதிசயமில்லிங்க; இதன் சொந்தக்காரர் இறந்து போயிட்டாரு. அதனாலே அவரைப் பார்க்க வேண்டுமானால் நீங்களும்......" என்று இளிக்கத் தொடங்கினான்.

"ஏது, நீ நல்ல தமாஷ் பேர்வழி போலிருக்கிறதே! அப்படித்தான் இருக்க

வேண்டும். முகத்தைச் சிடுசிடு வென்று இஞ்சி தின்ற குரங்கு மாதிரி வைத்துக் கொள்ளாமல்......!" என்றேன்.

"உங்களைப் பார்த்தால் பங்களாவை வாடகைக்குக் கேட்க வந்தமாதிரி தோன்றவில்லை. வம்புக்கு வந்த மாதிரி யல்லவா இருக்கிறது!" என்றான்.

"ஏய், வாடகைக்குக் கேட்பவர்கள் எப்படி இருப்பார்கள்? அவர்களுக்கு எத்தனை கொம்புகள் முளைத்திருக்கும்?"

"எனக்கு உங்களுடன் விளையாட நேரமில்லை. வேண்டுமானால் இப்பொழுதே பங்களாவைத் திறந்து கொடுக்கிறேன். நாள் ஒன்றுக்கு முப்பது ரூபாய் வாடகை. பைசா குறையாது. ஆனால் எப்படியும் சாயங்காலம் விளக்கு வைப்பதற்குள் காலி செய்துவிட வேண்டும். இரவில் தங்கவே கூடாது!" என்றான் கண்டிப்பான குரலில்.

"இரவில் தங்கினால் அதற்குரிய வாடகையையும் வாங்கிக் கொண்டு விடு!" என்றேன்.

"வேண்டாம், ஐயா, வேண்டாம். எங்கோ தொலைவிலிருந்து வந்திருப்பவர்களை உயிரோடு திருப்பி அனுப்பிவிட வேண்டாமுங்களா? வீணாக என் உயிரை விடப் போறீங்க?" என்றான்.

"என்னப்பா, பயங் காட்டுகிறாய்! இந்தா பதினைந்து ரூபாய்! பாக்கி பதினைந்தையும் சாயங்காலம் தருகிறோம். நாங்கள் இன்று ஒரே நாள்தான் தங்குகிறோம். இரவு ரயிலில் புறப்பட்டு நாளை திருச்சியில் 'டூட்டி'யிலே இருக்க வேண்டும். அதிருக்கட்டும்......இரவிலே இங்கே என்ன?" என்றேன்.

அவன் ரூபாயைக் கையிலே வாங்கி மடியிலே செருகிக் கொண்டு, "நானும் உங்களைப் போல் குழந்தை குட்டிக்காரன் தானுங்க! இந்த ஊரிலேயே பிறந்து வளர்ந்து இத்தனை காலமாய்ப் பழகினவனுக்கே இராத்திரி இந்த இடத்தில் இருக்க மனசு வரலேன்னு, உங்களை இருக்கும்படி மனசார எப்படிச் சொல்லுவேனுங்க? அது மட்டும் முடியுமென்றால் இந்தப் பங்களா இப்படிப் பூட்டிக் கிடக்குங்களா?" என்றான்.

பிறகு, "வாங்க, வாங்க! உள்ளே வந்து உட்காருங்க!" என்று முன்னால் நடந்து பூட்டைத் திறந்து, பங்களாவின் கதவுகளை அகலமாக ஒதுக்கினான்.

அது ஒரு விஸ்தாரமான அறை. அதில் ஒரு பெரிய வட்டமேஜையும் அதைச் சுற்றி ஐந்து நாற்காலிகளும் கிடந்தன. கீழே நெருப்புக் குச்சிகளும் கருகிய சிகரெட் துண்டுகளும் சோடா மூடிகளும் கிடந்தன. ஜன்னல் வழியாக மனோரம்மியமான மலைக் காற்று 'விர், விர்' என்று வீசத் தொடங்கியது. உயரே வேஷ்டி காயப் போடுவதற்கு ஒரு கம்பிக் கொடியும் சுவரில் ஒரு அலமாரியும் இருந்தன.

"எல்லாரும் வாருங்க; நல்லா உட்கார்ந்து கொள்ளுங்க! காப்பி, டீப்பி சாப்பிட்டீங்களா? அருவிக் கரைக்குப் போனீங்களா? இதற்கு முன்னாடி வந்திருக்கிறீங்களா? ஐந்தருவிக்குப் போயிருக்கிறீங்களா? தேனருவி தெரியுங்களா? பொங்குமா கடலிலே முழுகி யிருக்கிறீங்களா?" என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனான் அவன்.

எல்லாக் கேள்விகளுக்கும் சேர்ந்து ஒரே 'இல்லை' போட்டோம்!

"சில்லறை எடுங்கள், ஐயா! காப்பி வாங்கி வருகிறேன். அதுக்குப் பிற்பாடு தான் மற்றதெல்லாம்!" என்றான்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவன் வெளியே சென்று காப்பி, பலகாரங்களுடன் திரும்பி வந்தான். நாங்களெல்லாரும் காப்பி சாப்பிட்டுவிட்டு அவனையும் சாப்பிடச் சொன்னோம். காப்பிக்குப் பிறகு வெகு உற்சாகத்துடன் கதையைத் தொடங்கினான்:

•  •  •

பேய்க்குளம் வல்லப முதலியார் என்றால் இந்த ஜில்லாவில் தெரியாதவரே கிடையாது. பெரிய பெரிய ஜமீன்தார்கள் கூட ஆபத்துக்கு அவரிடம்தான் கடன் வாங்குவார்கள். அவ்வளவு பெரிய லேவா தேவிக்காரர். எல்லாரும் 'சீச'னுக்காக இங்கு வரும்போது, இவர் தன் லேவா தேவித் தொழிலுக்காக இங்கு வந்து தங்குவார். ஒரு 'சீச'னில் அவருக்குக் கிடைத்த வட்டித் தொகையைக் கொண்டே இந்தப் பங்களாவைக் கட்டி முடித்தார்.

முதலியார் பணத்தை மட்டும்தான் சதமென்று நம்புவாரே தவிர, மனுஷாளை நம்பவே மாட்டார். அவர் கச்சரிப்பு சகிக்க மாட்டாமல் பந்துக்கள் எல்லாரும் தூர ஒதுங்கிவிட்டார்கள். அவர் இம்சையைப் பொறுக்க மாட்டாமல்தானோ என்னவோ, ஒருத்தி பின் ஒருத்தியாக மூன்று மனைவிகள் மண்டையைப் போட்டு விட்டார்கள். அவர்கள் கிணற்றிலே குதித்துத் தற்கொலை செய்து கொண்டதாகவும், பவித்தி

யம் பிடித்து அருவிக் கரையில் பாறை வழுக்கி விழுந்து இறந்ததாகவும் எப்படி யெல்லாமோ ஊரிலே பலவித வதந்திகள். அதை யெல்லாம் நான் கண்ணால் பார்த்த தில்லை. கண்ணாலே காணாததை அநியாய மாய் நாம் வெளியே சொல்லலாமா? கூடவே கூடாது. அப்படிச் சொன்னால் ஏழேழு ஜன்மத்துக்கும் நல்ல கதியே கிடைக்காது. ஆதலால், நான் கண்ணால் கண்டதை மட்டும் சொல்கிறேன்.

(இந்த இடத்தில் காவற்காரன் மடியி லிருந்த பொடிப் பட்டையை எடுத்துத் தட்டி, இடது கை விரல்களால் நிறையப் பொடியை அள்ளி, வலது கை மணிக்கட் டில் செடுகமாய்த் தடவி, நாசியால் அதி வேகத்துடன் உறிஞ்சினான். பிறகு, ஒரு கனைப்புக் கனைத்தான்—இரண்டு தும்மல் போட்டான் — மறுபடியும் கதையைத் தொடர்ந்தான் :)

அறுபது வயதுக்கு மேல் கிறுகிறுப்பு என்கிறது மாதிரி, வல்லப முதலியார் அறுபத்தைந்தாம் வயதில் நான்காம் முறை யாக விவாகம் செய்து கொண்டு, அந்தச் சின் னப் பெண்மணியோடு இங்கேயே தங்கி விட் டார்.

அந்தப் பெண் ரொம்ப அழகு. படித்தவளும் கூட. யாரிடமும் சங் கோசமில்லாமல் தாராள மாய்ப் பேசுவாள். கண் ணுக்குச் செலவழிக்க வேண்டும்; தமாஷா யிருக்க வேண்டும் என்ற எண்ணமுள்ளவள். அதா வது, முதலியார் கொள் கைக்கு நேர் விரோதம் என்று சொல்லுங்க ளேன்!

பெரியவருக்குச் சாதா ரண காலத்திலேயே எதைக் கண்டாலும் பிடிக்காது. யாரையும் நம்பமாட்டார். இந்த லட்சணத்தில் வயது ஆக ஆக அவருக்குக் கண் பார்வை மங்கலாகி விட்டது. காதும் மந்தமாகி விட்டது. அத னாலே இல்லாததற்கெல் லாம் அந்தப் பெண்ணைக் கோபிப்பதும் குற்றம் சாட்டுவதும் சந்தேகப் படுவதும் விரட்டுவதுமாக , ஆரம்பித்து விட்டார். வேடிக்கை எப்படி?

சும்மாவே ஆர்ப்பாட்டம் செய்கிறவர் இரண்டொரு காரணம் கிடைத்தால் விடுவாரா?

பக்கத்துப் பங்களாவிலே ஒரு டாக்டர் வந்து தங்கினார். அவர் தம் குடும்பத்தோடு வந்திருந்தார். பக்கத்திலிருந்ததால் அடிக் கடி இந்தப் பங்களாவுக்கு வருவார். அவர் வரும்போதெல்லாம் முதலியார் தம்முடைய காது சரியாய்க் கேட்பதற்கும், கண் பார்வை தெளிவுபடவும் செலவில்லாமல் பக்குவங்கள் கேட்பார்!

என்ன நினைத்தாரோ என்னமோ தெரிய வில்லை. ஒரு நாள் டாக் டர் வந்திருக்கும்போது முதலியார் அவரைப் பார்த்து, "நீங்கள் இங்கே இனி வரக்



கூடாது. நீங்கள் வந்த பிறகுதான் எனக்கு நோய் நொடி வர ஆரம்பித்திருக்கிறது!'' என்று நடித்தனமாகப் பேசினார். டாக்டருக்கு எப்படி இருந்திருக்கும்? முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு போய்விட்டார்.

அன்றைக்கே முதலியார் தம் மனைவியை அடி அடியென்று கம்பினாலும் கழியினாலும் அடித்து இம்சித்து, "என் வீட்டை விட்டுத் தொலைந்து போ! மூதேவி! சனியன்!'' என்று அட்டகாசம் செய்தார். இந்தக் கோபத்துக்கெல்லாம் மூல காரணம் என்னவென்று தெரிகிறதல்லவா? ஆமாம்; அந்தச் சந்தேகம்தான்!

அந்தப் பெண் என்ன செய்வாள்? இத்தனை இம்சையை எத்தனை காலைக்குத்தான் பொறுத்துக்கொண்டிருப்பாள்? அன்று இரவோடு இரவாகக் கிணற்றிலே குதித்து உயிரை விட்டு விட்டாள்.

இந்த மட்டோடு நிற்கவில்லை. முதலியாரின் செய்கைகளை முழுதும் விவரமாகக் கவனித்துக்கொண்டிருந்த டாக்டர், தந்திரமாக ஒரு பாஷாண மருந்தை முதலியாரின் ஆகாரத்தில் கலந்துவிட்டார். முதலியார் என்ன செய்தார் தெரியுமா? சாப்பிடுவதற்கு முன்னால் டாக்டரை அவசர அவசரமாகக் கூப்பிட்டு விட்டார். டாக்டர் வந்ததும் அவரோடு சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார். அப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதே மடியில் மறைத்து வைத்திருந்த கத்தியைப் பளிச் சென்று கையிலெடுத்து, ஓங்கி டாக்டரின் கழுத்திலே குத்திவிட்டார்! பாவம், அந்த க்ஷணத்திலேயே டாக்டர் உயிர் துறந்தார்! ஆனால் விதி சும்மா விடுமா? எவ்வளவோ ஜாக்கிரதையாயிருக்கும் முதலியார் அன்று விஷம் கலந்த உணவைச் சாப்பிட்டுவிட்டு, இரத்தம் இரத்தமாக வாந்தி பண்ணி இறந்து போனார்.



இப்படி மூன்று பேர்களும் துர்மரண மடைந்தது இதே பங்களாவில்தான். இருட்டி விட்டதென்றால் 'ஓ, ஓ' என்ற இரைச்சலும் கூப்பாடும், ஓலமும் கதறலும், ஆங்கார அமளியும் பங்களாவைச் சுற்றிக் கேட்கும். இரவு வெகு நேரத்துக்குப் பிறகு இன்னும் இந்தச் சுற்று வட்டாரத்துப் பிசாசுகள் எல்லாம் சேர்ந்து தீப்பந்தங்களைப் பிடித்துக் கொண்டு ஆடும், அலறும், குரவையிடும், கூத்தாடும்! அப்பப்பா! இதைப் பார்த்து எத்தனையோ பேர் பயந்து சாஸ்வதமான மனக் கோளாறுகள் அடைந்திருக்கிறார்கள். அது முதல் யாருமே இந்தப் பங்களாப் பக்கம்

வருவதில்லை. அப்படியே வந்தாலும் இர வில் யாருமே இங்கு தங்குவதில்லை.

• • •

இந்தக் கதையைக் கேட்டுக் கொண் டிருக்கும்போதே என் நண்பர்களில் ஒரு தைரியசாலி, "பிரதர்! இந்த வம்பெல்லாம் எதுக்கு நமக்கு? ரூபாயையும் கொடுத்துப் பிசாசையும் பிடித்துக்கொண்டா போக ணும்? இப்போதே போய் விடலாம், வாருங்கள்!" என்றான்.

அதன்படி அன்று மாலையிலேயே பங்களா வைப் பூட்டி, வாடகையையும் சாவியையும் காவற்காரனிடம் கொடுத்து விட்டு, கடைசி முறையாக அருவியில் மற்றுமொரு தடவை ஸ்நானம் செய்து விட்டுத் தென் காசி ஸ்டேஷனுக்குக் கிளம்பினோம்.

ஸ்டேஷனை அடைந்ததும் அடுத்த ரயில் மறுநாட் காலை ஐந்து மணிக்குத்தான் என்றும், அதுவரை தங்கி இருப்பதற்கு 'வெயிட்டிங் ரூம்' கூடக் காலியா யில்லை என்றும் அறிந்தோம்.

அப்பொழுதுதான் என்னுடைய மணிபர் ஸும் குடையும் அந்தப் பங்களா ஜன்னல் விளிம்பில் வைத்து மறந்து போனது ஞாப கத்துக்கு வந்தது. எப்படியாவது போய் அவற்றை எடுத்து வந்துவிட வேண்டு மென்று நண்பர்களை அழைத்தேன். அவர் களில் பாதிப்பேருக்கு மனதே யில்லை.

கடைசியாக என் நண்பர் சூரப்புலி ஒருவரைக் கட்டாயப்படுத்தி இழுத்துக் கொண்டு, மீண்டும் குற்றாலத்தை நோக்கி ஒரு ஜட்கா வண்டியில் புறப்பட்டோம். புறப்படும்போதே வாடகையைக் கையில் வாங்கிக் கொண்ட ஜட்காவாலா, பங்களா வுக்குச் சற்றுத் தூரத்திலேயே எங்களை இறக்கி விட்டுவிட்டுப் போய்விட்டான்!

இரவு பத்து, பத்தரை மணி இருக்கும். நல்ல இருட்டு. "பிரதர்! நீங்கள் மட்டும் போய் எடுத்து வந்துவிடுங்கள்!" என்று என்னைத் தள்ளி விட்டுவிட்டு, ஒரு கல்லின் மீது உட்கார்ந்து தூங்கி விழ ஆரம்பித்தான் என் நண்பன்.

பங்களா வாசலை அணுகும்போது, எனக் குக் காவற்காரன் சொன்ன கதை நினை வுக்கு வந்தது. போவோமா, திரும்பி விடுவோமோ என்று என் மனம் நிலை யின்றி ஆடிக்கொண்டே யிருந்தது. பங்க ளாவின் வாசலையடைந்தேன். 'விர்ர்ர்' என்ற பெரிய இரைச்சல் திடீரென்று எழுந்து என்னைத் தூக்கி வாரிப் போட்டது.

நல்லவேளை! அது ஒரு மோட்டார் புறப்படும் சத்தம்தான்! பளிச்சென்று மோட்டாரின் வெளிச்சம் தோன்றியது. பங்களாவுக்குள்ளும் பிரகாசமான வெளிச் சங்கள் தெரிந்தன. மனிதர்களின் பேச்சுக் குரல் என்னை மேலும் திகைக்கச்செய்தது.

பங்களாவுக்குள் நுழைந்தேன். நாலைந்து வாலிபர்கள் மேஜையைச் சுற்றிலும் உட் கார்ந்து சிகரெட் குடித்துக் கொண்டும், சிரித்துக் கொம்மாளம் போட்டுக் கொண்டு மிருந்தனர்.

நான் நுழைந்ததும் அவர்களுடைய சத்தம் பளிச்சென்று நின்றது. ஆச்சரி யத்துடன் அனைவரும் என்னையே உற்று கவனித்தனர். எனக்கு எல்லாம் பார்த்த முகங்களாகவே தோன்றின. இதென்ன? கனவா? நனவா? மாயஜாலமா?

ஒன்றுமே பேசமுடியாமல் நேராக நான் இருந்த அறைக்குள் பிரவேசித்து ஜன்னல் விளிம்பைப் பார்த்தேன். பர்ஸும் குடையும் நான் வைத்த இடத்திலேயே இருந்தன. எடுத்துக்கொண்டு புறப்பட்ட போது அவர்கள் வழிமறித்து நிறுத்தி என்னை ஆயிரம் கேள்விகள் கேட்டுப் பேயாகப் படுத்தி வைத்தனர்.

அவர்களிடம் வெகுநேரம் பேசிக்கொண் டிருந்த பிறகு, நான் அறிந்து கொண்ட தாவது:

இவர்களும் திருச்சி ஆசாமிகள்தான். 'சீச'னுக்காக வந்தவர்கள். அவர்களில் ஒருவன் என் தம்பியுடன் வாசித்தவன்.

இவர்கள் ஒரு வாரத்துக்கு ஐந்நூறு ரூபாய் என்று வாடகை பேசி, இந்தப் பங்க ளாவை அமர்த்திக்கொண் டிருக்கிறார்கள். அன்றைக்கு முதல் நாளே செங்கோட்டை, தென்மலை முதலிய இடங்களைப் பார்த்து விட்டு வருவதாகவும், மறு நாள் இரவில் தான் திரும்ப முடியுமென்றும் சொல்லி, தங்கள் வேலைக்காரனை மட்டும் பங்களா விலே காவல் வைத்து விட்டுச் சென்றிருக் கிறார்கள். அவர்கள் திரும்புவதற்குள் இரகசியமாக எங்களுக்கு வாடகைக்கு விட்டு, ஒரு நாள் வாடகை ரூபாயைக் கைப் பற்றிக் கொண்டான் காவற்காரன். அந்த ஊரில் இரண்டு நாட்களுக்கு முன் அவன் அவர்களோடு சென்று பார்த்த சினிமாக் கதையைப் பங்களாவின் வரலாறாகச் சொல்லி எங்களை ஏமாற்றி விட்டான்!

இந்த வரலாற்றைக் கேட்ட எனக்கு எப்படி யிருக்கும் மனசு? சிரித்துக் கொண்டே ரயிலடிக்குத் திரும்பினேன்.

# தமிழ் இசைச் சங்கம், சென்னை

## ஐந்தாவது தமிழ் இசை விழா

## 1947—48

(அரண்மனைக்காரத் தெருவிலுள்ள செயிண்ட் மேரீஸ் ஹாலில்)

**திறப்பு விழா 23—12—47 மாலை 4-15 மணி**

திறப்பாளர்: சென்னை அமைச்சர் கனம் டி. எஸ். அவினாசிலிங்கம் பி.ஏ., பி.எல்., அவர்கள்

வரவேற்புக் கழகத் தலைவர்: 'கல்கி' ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

| | | |
|---|---|---|
| 23—12—47 | | |
| செவ்வாய்க்கிழமை | | |
| மாலை 3-30—4-30 | தமிழிசைக் கல்லூரி மாணவ, மாணவிகள் | பாட்டு |
| „ 6-30—8-30 | | |
| 24—12—47 | இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் | பாட்டு |
| புதன்கிழமை | திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் கும்பகோணம் | |
| மாலை 5-30 | இராஜமாணிக்கம் பிள்ளை | பிடில் |
| „ 8-30 | இராமநாதபுரம் ஸி. எஸ். முருகபூபதி | மிருதங்கம் |
| 25—12—47 | இசைமன்னர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை | பாட்டு |
| வியாழக்கிழமை | பரூர் அனந்தராமய்யர் பி.ஏ., | பிடில் |
| மாலை 5-30 | மாயவரம் நடராஜசுந்தரம் பிள்ளை | மிருதங்கம் |
| „ 8-30 | மன்னார்குடி வைத்தியலிங்கம் பிள்ளை | கொன்னக்கோல் |
| 26—12—47 | கோகிலகான இசைவாணி எம்.எஸ். சுப்புலட்சுமி | பாட்டு |
| வெள்ளிக்கிழமை | மைசூர் ஆஸ்தான வித்வான் டி. சௌடையா | பிடில் |
| மாலை 5-30 | கல்பாத்தி ராமநாதன் | மிருதங்கம் |
| „ 8-30 | ஆலங்குடி ராமச்சந்திரன் | கடம் |
| 27—12—47 | கானகலாதர மதுரை மணி அய்யர் | பாட்டு |
| சனிக்கிழமை | திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் மாயவரம் | |
| மாலை 5-30 | கோவிந்தராஜ பிள்ளை | பிடில் |
| „ 8-30 | இராமநாதபுரம் ஸி. எஸ். முருகபூபதி | மிருதங்கம் |
| 28—12—47 | இசைச்செல்வி கே. பி. சுந்தராம்பாள் | பாட்டு |
| ஞாயிற்றுக்கிழமை | இராமநாதபுரம் எம். என். கணேசன் | பிடில் |
| மாலை 5-30 | புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி ஆசாரி | மிருதங்கம் |
| „ 8-30 | ஆலங்குடி ராமச்சந்திரன் | கடம் |
| 29—12—47 | காயன கந்தர்வ சங்கீத சம்ராட் செம்பை | |
| திங்கட்கிழமை | வைத்தியநாத பாகவதர் | பாட்டு |
| மாலை 5-30 | மைசூர் ஆஸ்தான வித்வான் டி. சௌடையா | பிடில் |
| „ 8-30 | திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் பழனி | |
| | எம். சுப்ரமணிய பிள்ளை | மிருதங்கம் |
| 30—12—47 | திருமதிகள் ஆனந்தி. சாதா பரதநாட்டியம், அபிநயம் | |
| செவ்வாய்க்கிழமை | கோகிலகான இசைவாணி எம். எஸ். சுப்புலட்சுமி | |
| மாலை 5-30—8-30 | பதம் பாடுவார்கள் | |
| 31—12—47 | | |
| புதன்கிழமை | மதுரகீதவாணி என். ஸி. வசந்தகோகிலம் | |
| மாலை 5-30—8-30 | & பார்ட்டி | பாட்டு |
| 1—1—48 | திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் | |
| வியாழக்கிழமை | ஜி. என். பாலசுப்ரமணியம் | பாட்டு |
| மாலை 5-30 | திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் | |
| „ 8-30 | கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை | பிடில் |
| | திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் | |
| | பழனி எம். சுப்ரமணிய பிள்ளை | மிருதங்கம் |

### கட்டணம்

சீசன் - முதல் வகுப்பு ரூ. 35/-. இரண்டாம் வகுப்பு ரூ. 25/-. தமாஷ் வரி உள்பட. சீசன் டிக்கட்டுகள் தமிழ் இசைச் சங்க காரியாலயத்தில் (8/9, சிங்கண்ண நாய்க்கன் தெரு, சென்னை-1.) கிடைக்கும்.

ஆதரவாளர்கள், குறைந்த கட்டணத்தில் சீசன் டிக்கட்டுகள் சங்கக் காரியாலயத்தில் மட்டும் பெற்றுக் கொள்ளலாம்.

குழந்தைகளுக்கு அரைக் கட்டணம் வசூலிக்கப்படும்

# பச்சைக் கிளி

பீ. எஸ். மணி

ஒரு காட்டில் வேடன் ஒருவன் இருந்தான். அவன் பறவைகளைப் பிடித்து விலைக்கு விற்று, அதிலிருந்து தனது ஜீவனத்தை நடத்தி வந்தான். ஒரு நாள் அவன் ஒரு கிளியைப் பிடித்தான். அதை விற்பதற்காக அடுத்த ஊருக்குச் சென்றான்.

அக்கிராமத்திலிருந்த பணக்காரர் ஒருவர் கிளியை விலை கொடுத்து வாங்கினார். கிளி சுதந்திரமாக இருக்கும் பொருட்டு, அவர் ஒரு அறையின் நடுவில் ஒரு கம்பத்தை நட்டு, அதில் கிளி உட்காருவதற்கும் உணவு உண்பதற்கும் வசதி செய்து வைத்திருந்தார். ஒரு கயிற்றின் நுனியைக் கம்பத்தில் கட்டி, மற்றொன்றைக் கிளியின் காலில் கட்டி அது பறந்து போகாதபடியும் செய்து வைத்திருந்தார். அத்துடன் அதற்குப் பேசவும் கற்றுக் கொடுத்திருந்தார்.

கிளிக்கு வேளா வேளைக்கு வேண்டிய இரை கிடைத்து வந்தும் அதற்குச் சந்தோஷமில்லை. ஏனெனில், அது மற்றப் பறவைகளைப்போல் சுதந்திரமாக இருக்க ஆசை கொண்டது. ஆகவே, தன்னைப் பிடித்த வேடனையும், அவனிடமிருந்து வாங்கிய பணக்காரரையும், பொதுவாகத் தன் இனத்தைச் சேர்ந்தவர்களை அடிமைப்படுத்த ஆசை கொள்ளும் மனிதர்கள் எல்லோரையுமே அது நிந்தித்துக் கொண்டிருந்தது.

அந்த வீட்டில் ஒரு பூனை இருந்தது. அது சுதந்திரமாக வீடு முழுவதும் சுற்றிச் சுற்றி வந்தது. ஒருநாள் அது அந்த வீட்டிலிருந்த ஒவ்வொரு அறைக்குள்ளும் சென்று அங்கங்கே கிடைத்ததைத் தின்று வந்தது. கடைசியாக, அது கிளி அடைக்கப் பட்டிருந்த அறையை அடைந்தது. அங்கே அது கிளியைக் கண்டதும், "இது ஒரு பட்சியாகத் தான் இருக்க வேண்டும். பிடித்துத் தின்று விடுவோம்!" என்று தீர்மானித்தது. ஏனெனில், அந்தப் பூனை அதற்கு முன்னால் அம்மாதிரி ஒரு பட்சியையும் பார்த்ததில்லை.



பூனையைக் கண்டதும் கிளிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அது அந்த அறைக்குள்ளேயே இப்படியும் அப்படியுமாகப் பறந்து, பூனையின் வாயில் சிக்காமலிருப்பதற்கு முயன்றது. பூனையோ அதன்மேல் பாய்வதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தது. கிளிக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. உடனே, "வாருங்கள், வாருங்கள்!" என்று அது பூனையைப் பார்த்துக் கத்திற்று.

பூனை அதைக் கேட்டுச் சற்றுப் பின் வாங்கியது. மறுபடியும் கிளி, "வாருங்கள், வாருங்கள்!" என்று கத்தியது.

அவ்வளவுதான்; அந்தப் புதிய பூனை பயந்தே போய்விட்டது. "சரி சரி! இது மனிதர்கள் மாதிரி பேசுகிறது. இதுவும் ஒரு மனிதனாகத்தான் இருக்க வேண்டும்!" என்று தீர்மானித்து, அந்த அறையை விட்டுப் பூனை வெளியே எடுத்தது ஓட்டம்!

அப்பொழுதுதான் கிளிக்குப் போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது.

அது பூனை தன்னை மனிதனென்று எண்ணி ஏமாந்ததை நினைத்து நினைத்துச் சந்தோஷப்பட்டது. அத்துடன் தனக்குப் பேசக் கற்றுக் கொடுத்த பணக்காரரையும், அவரைச் சேர்ந்த மனிதர்கள் எல்லோரையுமே அது வாயார மனமார வாழ்த்தி வணங்கியது.

No. 1


சிக்கல் மயமான
உலகில்
உண்மை வாய்ந்தவை
எளிதான விஷயங்களே
ஒரு சிறு வில்லை
உங்களுக்கு
ஆரோக்கியம்
அளிக்க முடியும்
அது இயற்கைக்கு
மாறாக அன்றி அத
னுடன் ஒத்துவேலை
செய்கிறது
ஆஸ்ப்ரோவால்
இருதயத்துக்கு
ஒரு கெடுதியுமில்லை
'ஆஸ்ப்ரோ'
வலியையும் ஜுரத்தையும் போக்கடிக்கிறது
ஆடவர், ஸ்திரீகள், குழந்தை
கள் அனைவருக்கும் ஆஸ்ப்ரோ
செய்யக்கூடியதென்ன
ASPRO
ASPRO
ASPRO
எங்கும்
கிடைக்கும்

# நள்ளிரவிலே!

வி. பி. ஜயராமன்

சியாமளா ஒரு மணையின்மேல் உட்கார்ந்து அடுப்பைப் பற்ற வைப்பதில் முனைந்தாள். அவள் எவ்வளவோ முனைந்தும் கொஞ்சம்கூட நெருப்புப் பிடிக்கவில்லை. இரண்டு மூன்று நாட்களாக விடாமல் பெய்து கொண்டிருந்த மழையினால் விறகுகளெல்லாம் நனைந்திருந்தன. அந்த விறகுகளின்மேல் அவள் மண்ணெண்ணெயை ஊற்றி, ஊற்றித் தீக்குச்சியினால் தன்னால் ஆனமட்டும் பற்ற வைத்துப் பார்த்தாள். எண்ணெய் மட்டும்தான் அவளைப் பார்த்துப் பரிகசிப்பது போல் அடிக்கடி குபீரென்று பற்றி யெரிந்து உடனுக்குடனே அணைந்து விட்டதே தவிர, விறகுகள் பற்றி எரியவே யில்லை!

தன்னுடைய முயற்சியில் வெற்றி கிட்டாமற் போகவே, அவள் அலுத்துப் போய்க் கட்டிலின்மேல் பொத்தென்று விழுந்து அழத் தொடங்கினாள். அவள் மனம் என்னவெல்லாமோ எண்ணி எண்ணி ஏங்கியது.

இந்தச் சமயத்தில் வெளிக் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. எழுந்து போய்க் கதவைத் திறந்தாள். அவளுடைய கணவன் நாராயணன் வழக்கம்போல் கறிகாய்ப் பையுடன் காட்சி யளித்தான். சியாமளா அதை வாங்கிக் கொண்டு கதவைச் சாத்தி விட்டுத் தன் கணவன் பின்னால் வந்தாள். நாராயணன் கட்டிலின் மேல் உட்கார்ந்து கோட்டைக் கழற்றி அங்கேயே போட்டான். அவள் அதை எடுத்து ஆணியில் மாட்டிக் கொண்டே, "என்னுடைய புத்திக்கு ஒன்றும் எட்டவில்லை; நீங்கள் தினந்தோறும் இவ்வளவு நேரம் கழித்து வந்தால் உங்கள் உடம்பு என்னத்துக்கு ஆகும்?" என்றாள்.

"என்ன சியாமளா, உனக்கு ஒன்றும் தெரியவில்லையே! பொழுதோடு வீட்டுக்கு வந்துவிட்டால் மாதம் இருபது ரூபாய் அதிகமாக எங்கிருந்து வரும்?" என்றான் நாராயணன்.

"ஆமாம், உங்களுக்கு இருபது ரூபாய் தான் பெரிது! ஏன், ஐம்பது ரூபாய் சம்பளம் போதாதா, என்ன? எப்பொழுது பார்த்தாலும் பணம், பணம் என்று மனதை வீணாய் அலட்டிக் கொள்கிறீர்களே?"

"நீ என்ன சொன்னாலும் மனிதனுக்குப் பணம் அவசியந்தான், சியாமளா!...மிக மிக முக்கியமானதும்கூட! பணம் இல்லாவிடில் இந்தக் காலத்தில்...... சரி, சரி! எனக்குப் பசிக்கிறது; இலையைப் போடு!" என்றான் நாராயணன்.

சியாமளா வருத்தம் தோய்ந்த குரலில், "இந்த மழை காலத்தில் என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. விறகெல்லாம் நனைந்திருக்கிறது. காலையில் பண்ணிய சமையலில் கொஞ்சம் பாக்கி யிருக்கிறது. அதை இப்பொழுது சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொள்ளுங்கள். நாளைக் காலையில் உங்களுக்கு வேண்டியபடி சமைத்துப் போடுகிறேன்!" என்றாள்.

"சரி, கொண்டு வா! ஆனால்......இதோ பார், நாளைக் காலையில் வழக்கத்தைவிட இன்னும் இரண்டு கறி, கூட்டு எல்லாம் சேர்த்துப் பண்ணனும், தெரிந்ததா?" என்றான் நாராயணன்.

"தெரியாமலென்ன? நீங்கள் வேறே சொல்ல வேண்டுமா?" என்று சிரித்துக் கொண்டே, சமையலறைக்குள் ஓடினாள் சியாமளா.

## 2

மணி பத்து அடித்து விட்டது. நாராயணன் தூங்கிவிட்டான். சியாமளா மட்டும் கையில் ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படித்த வண்ணம் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

மீண்டும் யாரோ கதவைத் 'தட தட' வென்று தட்டும் சத்தம் கேட்டது.

"இந்த நேரத்தில் யார் வருவார்கள்? அதுவும் இந்த அடைமழையிலா? என்ன ஆச்சரியமான ஜனங்கள்!" என்று நினைத்துக் கொண்டே, தன் கணவனின் கையை மெல்ல அசைத்து, "அதோ

"பாருங்கள்! வெளியே யாரோ வந்து கதவைத் தட்டுகிறார்கள்!" என்றாள் சியாமளா.

நாராயணன் படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்தான். பிறகு சோம்பலை முறித்துக் கொண்டு, "யார் ஐயா, நீர்? உமக்கு என்ன வேண்டும்?" என்றான்.



"கொஞ்சம் கதவைத் திறவுங்கள்!" என்ற கம்மிய குரல் வெளியிலிருந்து வந்தது.

நாராயணன் கதவைத் திறந்ததும், ஓர் அழகிய வாலிபன் உள்ளே புகுந்து கதவைச் சாத்திவிட்டு, அதன்மேல் சாய்ந்து கொண்டான். அவன் உடுத்தியிருந்த ஆடைகளெல்லாம் நனைந்திருந்தன. முகத்தில் சொட்டும் நீரை அவன் வழித்துவிட்டுக் கொண்டே, தன் ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டான்.

அவனைப் பார்த்ததும் சியாமளா திடுக்கிட்டு மலைத்துப் போய் விட்டாள். அவளுடைய வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வெளிவரவில்லை. நாராயணன் பயந்து போய், அந்த வாலிபனையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். ஏனெனில், அவன் கையில் ஒரு கூரிய கத்தி இருந்தது.

நாராயணன் கொஞ்சம் கொஞ்சமாகத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "உங்களுக்கு இப்பொழுது என்ன வேண்டும்?" என்றான்.

"முதலில் தயவு செய்து கொஞ்சம் இடம் கொடுக்க வேண்டும். என்னைக் கண்டு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை; நானும் உங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதன்தான்! என்னால் உங்களுக்கு எந்த விதமான தீங்கும் ஏற்படாது. என் வார்த்தையில் நம்பிக்கை வையுங்கள்!" என்று சொல்லிக் கொண்டே வந்தவன், திடீரென்று சியாமளாவின் முகத்தைப் பார்த்ததும் அப்படியே நின்று விட்டான்.

மறு கணம் ஏதோ சொல்ல அவன் உதடுகள் துடித்தன. ஆனால் சமாளித்துக் கொண்டு பேசாமல் இருந்து விட்டான்.

"சரி, வாருங்கள்; போவோம்!" என்று நடந்தான் நாராயணன். அவனுக்குப் பின்னால் அந்தப் புது மனிதனும் சியாமளாவும் சென்றார்கள்.

"குளிர் தாங்கவில்லை; தயவு செய்து வேறு ஏதாவது சட்டை, வேஷ்டி இருந்தால் கொடுக்கிறீர்களா?" என்று மிகவும் பணிவுடன் கேட்டான் அந்தப் புதிய மனிதன்.

உடனே சியாமளா ஓடோடியும் சென்று, ஒரு வேஷ்டியும், சட்டையும் கொண்டு வந்து தன் கணவன் கையில் கொடுத்தாள்.

“ அதோ, அந்தப் பக்கத்து அறைக்குள் போய் உங்கள் உடைகளை மாற்றிக் கொள்ளுங்கள். அங்கேயே கொடிக் கயிறும் இருக்கிறது ; அதன்மேல் நனைந்தவைகளை உலரப் போட்டு விடுங்கள் !” என்று சொல்லிக் கொண்டே, சியாமளா எடுத்துக் கொண்டு வந்த சட்டையையும், வேஷ்டியையும் அந்தப் புதிய மனிதனின் கையில் கொடுத்தான் நாராயணன்.

அவன் அந்த ஆடைகளை எடுத்துக் கொண்டு, அடுத்த அறைக்குப் போய் விட்டான். அவனையே பார்த்துக் கொண்டிருந்த சியாமளா, தன் கணவன் தன்னைக் கவனிக்கிறான் என்று அறிந்து, முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

“ என்ன ஆச்சரியமான மனிதன் ! இந்த அகாலத்தில் வந்து நம் உயிரை வாங்குகிறானே ! பார்த்தால் கொலைகாரன் மாதிரி இருக்கிறது ! இல்லாவிட்டால் அவன் ஏன் தன் கையில் கத்தி வைத்திருக்க வேண்டும் ?” என்று சியாமளாவை நோக்கிக் கேட்டான் நாராயணன்.




“ அவன் முகத்தைப் பார்த்தால் அப்படியொன்றும் தெரியவில்லை. ஏதோ உயர்ந்த நோக்கமுடையவன்போல் தோன்றுகிறது. மேலும், தன்னால் ஒரு தீங்கும் ஏற்படாதென்று சொல்லி, அவன் நம்மைச் சரணாகதி அடைந்திருக்கிறான். அவன் வார்த்தையில் நாம் கொஞ்சம் நம்பிக்கை வைக்கத்தான் வேண்டும் !” என்றாள் சியாமளா.

அவளது இளகிய உள்ளத்தைக் கண்டு நாராயணனின் உள்ளமும் இளகி விட்டது. “ ஆமாம், சியாமளா ! பாவம், என்ன இருந்தாலும் நம்மைப் போன்ற மனிதன் ! என்ன கஷ்டத்தில் மாட்டிக்கொண்டு அவஸ்தைப் படுகிறானோ ! குளிரில் அவனுடைய கை கால்களெல்லாம் நடுங்கிக் கொண்டிருக்கின்றன. அத்துடன் அவனுக்குப் பசியாயிருந்தாலும் இருக்கும் !” என்றான்.

“நீங்கள் விரும்பினால் கொஞ்ச நேரத்தில் அவனுக்கு ஏதாவது ‘ டிபன் ’ செய்து கொண்டு வருகிறேன் !” என்றாள் சியாமளா.

“ ஆமாம், சிரமத்தைப் பாராமல் ஏதாவது செய்துகொண்டு வா ! இவ்வளவு கஷ்டத்திலிருக்கும் மனிதனுக்குப் பசியில்லாமல் இருக்காது !” என்றான் நாராயணன்.

அவ்வளவுதான் ; சியாமளா வேகமாகச் சமையலறைக்குள் ஓடினாள். அவசர அவசரமாக அடுப்பை மூட்டினாள். கைவசமிருந்த மண்ணெண்ணெய் அவ்வளவையும் கொட்டிப் பற்ற வைத்தாள். விசிறி கொண்டு விசிறியும், வாயைக் கொண்டு

ஊதியும் எப்படியோ சிறிது நேரத்துக்கெல்லாம் அடுப்பை நன்றாக எரிய வைத்து விட்டான்!

இந்தச் சமயத்தில் வெளியே 'பூட்'ஸை மாட்டிக்கொண்டு பலர் ஓடும் சத்தம் கேட்டது. நாராயணனும் சியாமளாவும் தங்கள் தங்கள் அறையை விட்டு வெளியே வந்து, அந்த வாலிபனை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

அவன் சொன்னான்:

“ஆம், அவர்கள் போலீஸ்காரர்கள் தான்! ஆனால் என்னை இனி அவர்களால் பிடிக்க முடியாது!”

“அப்படியானால் நீங்கள் ஜெயிலிலிருந்து தப்பி ஒப்பி ஓடி வந்து விட்டீர்களா, என்ன?” என்று கேட்டான் நாராயணன்.

“ஆமாம், என்னை ஏதோ சந்தேகத்தின் பேரில் கைது செய்து காவலில் வைத்திருந்தார்கள். நேற்றுத்தான் ஒரு நண்பரின் உதவியைக் கொண்டு ஓடி வந்து விட்டேன். அவர்தான் வழியில் யாராவது என்னைப் பிடிக்க வந்தால், அவர்களைப் பயமுறுத்துவதற்காக என்னிடம் ஒரு கத்தியையும் கொடுத்தனுப்பினார்!” என்றான் அவன்.

“நீங்கள் எதற்காக ஜெயிலைவிட்டு ஓடி வந்தீர்கள்?” என்று கேட்டாள் சியாமளா.

“இந்த உலகத்தில் என் உயிரைக் காட்டிலும் மேலானதாக மதிக்கும் ஒரு ஜீவனை நான் விரும்புகிறேன்; அந்த ஜீவனின் நினைவே என்னை ஜெயிலிலிருந்து வெளியே ஓடி வரச் செய்தது. ஆனால் அந்த ஜீவனை அன்று எந்த ரூபத்தில் பார்த்தேனோ, அதே ரூபத்தில் இன்று பார்க்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை!” என்றான் அந்த வாலிபன்.

இதைக் கேட்டதும் நாராயணன் முகத்தில் ஒரு புன்னகை தோன்றி மறைந்தது.

அதற்குள் சியாமளா மீண்டும் சமையலறைக்குள் சென்று, சிறிது நேரத்துக்கெல்லாம் உப்புமா, காப்பி எல்லாம் தயார் செய்து கொண்டு வந்து விட்டாள்.

மூவரும் சேர்ந்து சாப்பிட்டான பிறகு, நாராயணன் கட்டிலில் படுத்துத் தூங்கி விட்டான். சியாமளாவுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. அவள் பேசாமல் படுத்த வண்ணம் அந்த வாலிபனையே கவனித்துக் கொண்டிருந்தாள். அந்த வாலிபன் மட்டும் அங்கிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, சிறிது நேரத்துக்கு முன் சியாமளா படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தான்.

## 3

மூன்று வருஷங்களுக்கு முன்னால் நடந்த சம்பவங்கள், சியாமளாவின் கண் முன்னே ஒன்றன்பின் ஒன்றாக உருண்டு வந்தன. அந்தக் காலத்தில்—இதோ! இவள் முன்னே இப்பொழுது உட்கார்ந்திருக்கிறானே ராமு, அவன் அவளுக்கே சொந்தமாயிருந்தான். இருவரும் தங்களை யாராலும் பிரிக்க முடியாதென்று திடமாக நம்பியிருந்தார்கள். ஆனால் விதி? சியாமளாவை முன்பின் தெரியாத நாராயணனுக்கு மாலையிடும்படி செய்துவிட்டது.

ராமுவை எப்படி எப்படியெல்லாமோ மறக்க முயற்சி செய்து பார்த்தாள் சியாமளா; முடியவில்லை. எப்படி முடியும்? கரைபுரண்டு ஓடிய அன்பு வெள்ளம் திடீரென்று எப்படி வற்றிவிடும்?

தன்னை மறந்து விடுவதற்காக ராமு ஏதேதோ தகாத காரியங்களெல்லாம் செய்கிறான் என்று கேள்விப்படும்போது சியாமளாவின் உள்ளம் உருகும். அவனைப் பற்றிப் பலவிதமாகக் கற்பனை செய்து பார்ப்பாள். “ஒரு காலத்தில் அவன் எப்படியாவது தன் முன்னே வந்து நிற்பான்; அப்பொழுது தன் அந்தரங்கத்தில் உள்ள அவ்வளவு விஷயங்களையும் அவனிடம் மூச்சு விடாமல் சொல்லி, அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். 'ராமு! நான் உன்னை மறக்கவில்லை; மறந்தாலும் உன்னுடைய நினைவு அடிக்கடி தோன்றி என்னைத் துன்புறுத்துகிறது!' என்றெல்லாம் சொல்லி, அவனைத் தேற்ற வேண்டும்!” என்று அவள் எண்ணிக் கொண்டிருந்தாள். ஆனால் அதே ராமு இன்று தன் முன்னே வீற்றிருக்கிறான்; தன்னுடைய நினைவால் சிறையை விட்டு ஓடி வந்திருக்கிறான்! தன்னால் ஒன்றும் பேசவோ செய்யவோ முடியவில்லை!

இந்தச் சமயத்தில் அடுத்த வீட்டுக் கடிகாரம் மணி மூன்று என்பதை அறிவித்தது. அந்த வாலிபன் நாராயணன் பக்கம் திரும்பி, “மிஸ்டர்! கொஞ்சம் எழுந்திருங்கள்! நான் போகவேண்டும்!” என்றான்.

அதுவரை படுக்கையில் விழித்துக் கொண்டிருந்த சியாமளா, இதைக் கேட்டதும் குதித்தெழுந்து சொன்னாள்:

"அவளை இப்பொழுது எழுப்பாதீர்கள்! முதலில் நீங்கள் வெளியே போவதற்கு உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள்; பிறகு நான் அவளை எழுப்புகிறேன்."

"அப்படியே செய்யுங்கள்!" என்று சொல்லி விட்டு, ராமு அடுத்த அறையில் உலர வைத்திருந்த தன் உடைகளை எடுத்துக் கொண்டு வருவதற்காகச் சென்றான். வெளியே பயங்கர இருள் மூடிக் கொண்டிருந்தது. சியாமளா விளக்கை எடுத்துக் கொண்டு போய் அந்த அறையின் வாசற்படி மேல் வைத்தாள். ராமு தன் சட்டையையும் வேஷ்டியையும் தொட்டுப் பார்த்தான். அவை கொஞ்சங்கூட உலரவில்லை!

"இந்த ஆடைகள் இதுவரை கொஞ்சம் கூட உலரவில்லை. இருந்தாலும் இவற்றையே நான் அணிந்து கொள்கிறேன்!" என்றான் ராமு.

"வேண்டாம்; நீங்கள் இப்பொழுது உடுத்திக் கொண்டிருக்கும் உடைகளுடனேயே போய் வாருங்கள்!" என்றாள் சியாமளா.

"ரொம்ப வந்தனம், உங்களுக்கு!" என்றான் ராமு.

சிறிது நேரம் இருவரும் மௌனமாகவே நின்று கொண்டிருந்தார்கள்.

"நீங்கள் அவளை எழுப்புங்கள்; நான் அவரிடம் சொல்லிவிட்டுப் போகிறேன்!" என்று சொல்லி, அவளுடைய மௌனத்தைக் கலைத்தான் ராமு.

அப்பொழுதும் அவள் பேசவில்லை. ஒரு முறை அவனை விழித்துப் பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள்.

"நீங்கள் ஏன் இப்படி மௌனம் சாதிக்கிறீர்கள்?"

சியாமளா மெல்லத் தலையை உயர்த்தினாள். அவளுடைய கண்களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது. இதழ்கள் மெல்ல அசைய, தழுதழுத்த குரலில் அவள் சொன்னாள்:

"ராமு! என்னை மறந்து விட்டீர்களா?"

அவள் 'ராமு' என்றதும், அப்படியே பிரமித்து நின்று விட்டான் அந்த வாலிபன். பிறகு, தட்டுத் தடுமாறிக் கொண்டு, "சியாமளா!......நீ என் அருமை சியாமளாவேதானா?" என்றான்.

அவள் மீண்டும் தலை குனிந்து கொண்டாள்.

"எனக்கு அப்பொழுதே சந்தேகமாயிருந்தது; ஆனால் சொல்ல முடியவில்லை. சரி, இப்பொழுது நீ சுகமாகத்தானே இருக்கிறாய்?" என்று கேட்டான் ராமு.

அதற்கும் அவள் பதில் சொல்லவில்லை; ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டுப் பேசாமல் நின்றாள்.

பிறகு, "ராமு, எனக்காக நீ இந்தக் கெட்ட செய்கைகளையெல்லாம் தயவு செய்து விட்டுவிட வேண்டும். கையில் கத்தி வைத்துக் கொண்டு திரிவதும், போலீஸ்காரர்களுக்கு மறைந்து ஓடுவதும் எனக்குப் பிடிக்கவில்லை. எப்படியாவது நீ பழையமாதிரி என் சாந்த சொரூபியான ராமுவாக மாறிவிட வேண்டும்!" என்றாள்.

"நீ என்னுடைய பார்வையிலிருந்து ரொம்ப தூரம் ஓடிவிட்டாய், சியாமளா! அதனால்தான் என் வாழ்க்கையை நான் இப்படியெல்லாம் கெடுத்துக் கொண்டு விட்டேன். இல்லாவிட்டால் அந்த ஜெயிலிலிருந்து......"

"ஆமாம், நீங்கள் ஜெயிலிலிருந்து ஓடி வந்து விட்டீர்களே, அதற்கு என்ன ஆகும் இப்பொழுது?"

"ஒன்றும் ஆகாது. மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் விடுதலை கிடைத்துவிடும். ஆனால் இனிமேல் நான் ஏன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வெளியே வர வேண்டும்?"

"இல்லை; அவசியம் நீங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளத்தான் வேண்டும்!"

"வேண்டாம் சியாமளா, வேண்டாம். நான் ஜெயிலுக்குள்ளேயே அடைந்து கிடப்பதுதான் நல்லது!" என்றான் ராமு.

"அப்படியானால்......" என்று ஏதோ சொல்ல வாயெடுத்தாள் சியாமளா. அதற்குள் அவள் கணவன் நாராயணன் அவளை மெல்லக் கூப்பிடும் குரல் கேட்டது. உடனே அவள் தன் தலையை ராமுவுடைய பாதங்களில் வைத்துச் சொன்னாள்:


"ராமு! என்னை மறக்காதீர்கள்!"

அவ்வளவுதான்; ராமு அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியே சென்று விட்டான்.

* * *

மறுநாள் மத்தியானம் ராமு உலர வைத்துவிட்டுச் சென்றிருந்த சட்டையையும் வேஷ்டியையும் எடுத்துப் பெட்டியில் வைக்கும்போது, சியாமளா தனக்குள் சொல்லிக் கொண்டாள்: "ராமு, நீங்கள் எப்பொழுது திரும்புவீர்கள்?"

(ஹிந்திக் கதை யொன்றைத் தழுவியது)



# அபிவிருத்தியில் பங்காளிகள்

நவயுக வாயிற்படிமீது காலூன்றி, நாம் இன்றைய பாரதநாட்டில் மாபெரும் மாறுதல்களை நேருக்கு நேர் கண்ணுறுகிறோம். வலிமையும் ஒன்றிப்பு மோங்கி, மேலான இருக்கை, உணவு . . . உடுக்கை வசதிகளுடன் சிறந்து விளங்குமோர் தேசமாகும் நம் கண்முன் நிகழ்வது. அப்படிப்பட்ட நாளைய நாட்டிலும் பக்கிங்ஹாம் & கர்னாடிக் மில்லுகளின் நீடித்துழைக்கும், கவர்ச்சிவாய்ந்த, உயர்ந்த நெசவுத் தரங்களுக்கு நல்ல கிராக்கி யிருக்கத்தான் செய்யுமென்கிற நம்பிக்கை மேன்மேலும் எங்கள் அபிவிருத்திக்குத் தூண்டுகோலாக அமைகிறது.

இன்று ரசாயனங்களுக்கும், சாயங்களுக்குமுள்ள பஞ்சம் எங்கள் உற்பத்தியை மட்டுப்படுத்தியே வருகிறது - அவசிய துணி தினுசுகள் மட்டுமே எங்களால் இப்பொழுதும் தயாரிக்க இயலுகிறது. ஆனால் அந்நெசவுத் தரங்கள், எழுபதாண்டுகளாக எங்கள் தயாரிப்புகளைச் சிறப்பித்துள்ள நேரிய தன்மையிலும், உழைப்பிலும், யாவற்றிற்கு மேலான பெறுமதியிலும் கிஞ்சித்தேனும் குறைபாடுகளின்றியே விளங்குகின்றன

இப்பொழுது, கிடைக்கும் சொற்ப துணிமணிகளை கூடுமான காலம் உழைக்கச் செய்ய வேண்டியிருப்பதால், நீங்கள் இந்தப் பெயர்போன வர்த்தக முத்திரைகளுடைய டிரில்கள், ட்வில்கள், லாங்க்ளாத்து, ஷர்ட்டிங்குகள், கோட்டிங்குகள், டஸ்ஸோர்கள் ஆகியவைகளை வாங்குவது முன்னெப்பொழுதையும் விட அவசியமாகிறது:

**பக்கிங்ஹாம் & கர்னாடிக் மில்ஸ்** (சென்னை)

மானேஜிங் ஏஜண்டுகள்: பின்னி & கோ. (மெட்.) லிட்.

# சொட்டா சஞ்சிகை

## சந்தா

சொந்தமாகச் சிறு பத்திரிகை ஒன்று போடுவதென்று தீர்மானித்திருக்கிறேன். முதல் இதழுக்கு வேண்டிய விஷயங்களெல்லாம் தயாராகி விட்டன. அவற்றை இதோ உங்கள் பார்வைக்குச் சமர்ப்பிக்கிறேன் :—

1. தலையங்கம் :

### சீக்கிரமே செய்க !

நம் நாட்டுப் பண்டம் ஒன்று, உலக மார்க்கெட்டில் ஏகபோகம் அனுபவிக்க முடியும். அப் பண்டத்தின் மூலம் நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்தலாம்; வறுமைப் பிணியை அகற்றலாம்; வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம்.

அப் பண்டம் என்ன தெரியுமா? அது தான் அப்பளம்!

அப்பளங்களை உயர்தரமாகத் தயாரித்து அழகான பாக்கெட்டுகளில் அடைத்து, கப்பல் கப்பலாக ஏற்றி, உலகத்து நாடுகள் அனைத்திலும் விற்பனை செய்ய வேண்டும். அப்பளமிடுவதைப் பெரியதொரு தேசியத் தொழிலாகவே நடத்த வேண்டும். அப்படி நடத்துவதற்குப் பூர்வாங்கமாகச் சில காரியங்களை அரசாங்கம் சீக்கிரமே செய்ய வேண்டும்.

அ. துரிதமாகவும் பெருத்த அளவிலும் அப்பளம் உற்பத்தி செய்யும் வழிகளை ஆராய்ந்து, தக்க சிபார்சுகள் சொல்லும் பொருட்டு, அம்மாமிகளும் பாட்டிகளும் அடங்கிய பிரத்யேகக் கமிட்டியொன்றை அமைக்க வேண்டும்.

ஆ. வெவ்வேறு பாஷைகளில் விளம்பரங்கள் செய்யும் பொருட்டு, அப்பளப் பிரசார உபகமிட்டியொன்றையும் நியமிக்க வேண்டும்.

இ. அப்பளத் தூதுகோஷ்டிகளை விமான மூலம் நாலுதிசையும் அனுப்பி வைத்து, எந்தெந்தத் தேசங்களில் எத்தனையெத்தனை கோடி அப்பளம் விற்கலாம், என்னென்ன விலைகள் போட்டு விற்கலாம் என்ற விவரங்களைத் திரட்டி வரச் சொல்ல வேண்டும்.

ஈ. அப்பள உற்பத்தி, ஏற்றுமதி முதலியவை பற்றிய கட்டுத்திட்டங்கள் அடங்கிய மசோதா ஒன்றைக் கணித்துச் சட்டமாக்க வேண்டும்.

அரசியலார் இந்த லாபகரமான யோசனையைச் சீக்கிரமே மேற்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

2. வசன கவிதை:

### என்ன வாழ்க்கை இது!

" எழில் விழியன் "

காலைக் கதிரவன்
  கிழக்கே கொப்புளிப்பான் ;
    காபி சாப்பிடுவேன் !

மாலைக் கதிரவன்
  மேற்கே முக்களிப்பான் ;
    டீ சாப்பிடுவேன் !

வானில் சந்திரன்
  சோந்து சுற்றுவான் ;
    ஒன்றும் சாப்பிடமாட்டேன் !

அப்புறம் தூக்கம்......
  கனவுகள்.........!!

3. சிறுகதை:

### மோஹினி

" மைனா "

அவளுடைய அற்புத முகத்தழகை இரு விழிகளாலும் அள்ளியள்ளிப் பருகிக் கொண்டு நின்றான் சாகரன் பி. ஏ. பி. எல். அவளும் அவனைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். ஆனால் அவனும் பேசவில்லை; அவளும் பேசவில்லை. நிமிஷங்கள் கரைந்தன.

அவளுடைய ஒய்யாரச் சிரசிலிருந்து, வெல்வெட்டுப் போன்ற உல்லாச மைக் கருங் கூந்தல், அலையலையாகப் புரண்டு விழுந்து கொண்டிருந்தது. அவளுடைய நெற்றியோ, பூரணச் சந்திரனைப் பாதியாக வகிர்ந்து பதித்தாற்போல் பகட்டித் திகட்டிக் கொண்டிருந்தது. புருவங்களோ, கோலமயில் தோகையை ஜால வில்லாக வளைத்து விட்டாற்போல், பார்ப்போரை மயக்கிக் கொண்டிருந்தன. பல வாலிபர்

களின் ஆசைக் கப்பல்களை மூழ்கடிக்கும் மோகனக் கடல்க ளென்றுதான் அன்னவளின் விசால நயனங்களை வர்ணிக்க வேண்டும். பவள மல்லிகைக் காம்புகளை வரிசையாகக் கோர்த்துவிட்டதுபோலிருந்த அம்மோஹினியின் தேமதுரக் கனியிதழ்களில், இந்த உலகத்தை அடிமை கொள்ள வல்ல பொல்லாப் புன்னகை யொன்று, புள்ளிமானெனத் துள்ளி விளையாடிற்று!

சாகரன் நீண்ட பெருமூச்சு விட்டான்.

"இந்தச் சித்திரத்தை நான்தான் வரைந்தேன்!" என்று பக்கத்திலிருந்து ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான் சாகரன். மகா அவலட்சணமான முகத்துடன் கூடிய ஒரு கிழவன் நிற்பதைக் கண்டான்.

சாகரன் மனதிலிருந்து ஒரு கேள்விக் குறி புறப்பட்டு, அவன் நெற்றிமேல் ஏறி நின்றது. அந்தக் கேள்விக் குறியைக் கண்டதாடிக் கிழவன், "என் மனைவியை 'மாட'லாகக் கொண்டுதான் இப் படம் வரைந்தேன்!" என்று சொல்லிவிட்டுக், கோரைப் பற்களைக் காட்டிச் சிரித்தான்.

அவ்வளவுதான்; சாகரன் மூர்ச்சித்து, தடாலென்று கீழே விழுந்துவிட்டான்.

சிறிது நேரத்துக்குப் பிறகு, அவன் "விசித்திரமான சொப்பனந்தான்!" என்று சொல்லிக் கொண்டே, மீண்டும் கட்டிலின் மேல் ஏறிப் படுத்தான்!

4. ஹாஸ்யப் பகுதி :

மனைவி :—இன்னிக்கு சினிமாவுக்குப் போவோமா?

கணவன் :—சரி, போவோம்!

5. மாதர் பகுதி :

## பாதிஸ்தான் வேண்டும்!

விராங்கனை விமலாதேவி

ஜனத்தொகையில் ஆண்கள் பாதி, பெண்கள் பாதி. அப்படியிருந்தும் ஜனநாயக உரிமைகளில் ஆண்களுக்குச் சமமான பங்கு பெண்களுக்குக் கிடையாது!

சட்ட சபைகளைப் பாருங்கள்; மந்திரி சபைகளைப் பாருங்கள்; சர்க்கார் காரியாலயங்களைப் பாருங்கள்; எல்லாவற்றிலும் ஆண்களேதான் மேலாதிக்கம் கொண்டிருக்கிறார்கள்!

பெண்மணிகளே! வீறு கொண்டெழுங்கள்! எல்லா உரிமைகளிலும் பாதிஸ்தான் வேண்டுமென்று போராடுங்கள். பாதிஸ்தான் அடையும் வரை புருஷர்களுடன் பேசாதீர்கள்; சமைத்துப் போடாதீர்கள்; அலங்காரம் எதும் செய்து கொள்ளாதீர்கள்!

அல்லி மலர் சூடி அணிவகுத்து வாருங்கள்! பாதிஸ்தானுக்காகச் சத்தியாக்ரகம் செய்வோம்!

6. சுகாதாரப் பகுதி :

## விஷக் கிருமிகள்

டாக்டர் சிங்கரன்

ஒரு காலணாவின் மேல் ஒரு லட்சம் கிருமிகள் உட்கார்ந்திருக்க முடியும். அப்படியென்றால் உலகம் முழுவதிலும் எத்தனை கோடானு கோடி கிருமிகள் குடியிருக்கின்றன என்பதைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

டாங்மரியா, பாலிமேலாரியா என்ற இனங்களைச் சேர்ந்த கிருமிகள் மிகவும் அபாயகரமானவை. வினாடிக்கு விநாடி அவற்றின் கூட்டங்கள் பன்மடங்கு பெருகிக் கொண்டு, பல திசைகளில் பரவிக் கொண்டும் இருக்கும்.

இந்தப் பொல்லாத கிருமிகளும்கூட, சூரிய மண்டலத்தில் உயிர் வாழ முடியாது. ஏனென்றால், இவற்றைக் கொல்லும் சக்தி சூரிய கிரணங்களிடம் இருக்கிறது. கிரணங்களுக்கு இருக்கும் இக் கொல்லும் சக்தியைத் திரவ பதார்த்தமாக வடிக்க முடியுமா என்று, பல வருஷங்களாக நான் ஆராய்ச்சி நடத்தினேன். அதன் பலனே "சிங்கரன்ஸ் கிருமி கில்லேர!"

இது எல்லா மருந்துக் கடைகளிலும் நிச்சயமாய்க் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்!

7. வினாவிடைப் பகுதி :

வாலாட்டின் புத்தூர்

"குரங்கு மனிதனாகப் பரிணமித்த தென்பது உண்மையா?"

—"ஆஞ்சநேயன்."

பதில் :—அல்ல; மனிதன்தான் குரங்காகப் பரிணமித்தான்!

8. இலக்கியம் :

## கப்பமா, கப்பலா?

திரு. திருகுமருகனார்

"சப்பறைத் தோமான் கப்ப× கட்டினன்"

மேற்கண்ட சப்பறையம்பதிக் கல்வெட்டு குறித்து திரு சொக்கட்டனார் வரைந்துள்ள ஆராய்ச்சி விந்தையிலும் விந்தையே!

மேற்காணும் வரியிலே, மூன்றாம் சொல்லிலே, நான்கா மெழுத்தானது அழிந்து போயிருக்கின்றது. அஃதென்ன வெழுத்தென் றாராயப் போந்த திரு. சொக்கட்டனார், 'ல்' என்பதே அஃதென் றியம்புகின்றார். என்னே கூற்று இருந்தவாறு! சப்பறைக் கோமான் வணங்காமுடி மன்னனாய் வீற்றிருந்ததை, திரு. சொக்கட்டனார் அறிந்திலர் போலும்! சப்பறைக் கோமானுக்குத்தான் பல சிற்றரசர் கப்பங் கட்டினரே யன்றி, அவன் யார்க்குங் கப்பம் கட்டினா னிலன். "சப்பறைக் கோமான் ஒப்புயர் மன்னன் கப்பங் கேட்க மறுப்பார் யாரே!" என்று. மகிழேந்திப் பலவர் அறைந்த மொழிகளே இதற்குச் சான்றாம்.

நிற்க, அழிந்தொழிந்த வெழுத்துத்தான் என்னை? அஃது 'ல்' என்பதேயாம். "சப்பறைக் கோமான் கப்பல் கட்டினன்" என்பதேதான் சரியான பாடம்.

அம் மன்னவன் கப்பலோட்டினனென் பதற்கோ சான்றுகள் பலவுள. அவற்றுளொன்றினை மட்டும் ஈண்டு மேற்கோள் கூறுவோம்.

"கோப்பறை யேற்றிக் கப்பலோட்டிய
சப்பறைக் கோமான்."

இஃது தேங்காய்த் தலையனாரின் பொய்யாமொழி. கப்பலோட்டிய கோமான் கப்பல் கட்டவும் செய்தானென் றுரைப்பது சாலப் பொருந்துமன்றோ!

9. பாப்பா பகுதி :

## கெட்டிக்காரக் கொக்கு

"குட்டி மாமா"

ஒரே ஒரு காட்டில் ஒரு ஓநாய் இருந்தது. ஒரு நாள் அந்த ஓநாயின் தொண்டையில் ஒரு எலும்பு சிக்கிக் கொண்டது. அதை எடுக்க முடியாமல் அது ரொம்பவும் சங்கடப் பட்டது. அப்போது அந்தப் பக்கமாய் ஒரு கொக்கு வந்தது. அந்தக் கொக்கை ஓநாய் கூப்பிட்டு, "அருமைக் கொக்கனாரே, என் தொண்டையிலிருக்கும் எலும்பைத் தயவு செய்து உம்முடைய நீண்ட அலகினால் எடுத்து விட்டால், உமக்கு நல்ல வெகுமதி தருவேன்" என்று சொல்லிற்று.

இதைக் கேட்டதும் கொக்கு இடியிடி என்று சிரித்தது.

"ஏன் சிரிக்கிறீர்?" என்று ஓநாய் ஒன்றும் புரியாமல் கேட்டது.

"பழைய கதை யொன்று ஞாபகத்துக்கு வந்தது, சிரிக்கிறேன்!" என்று கொக்கு பதில் சொல்லிற்று.

"அது என்ன கதை?" என்று ஓநாய் மேலும் கேட்டது.

"பழைய கதையைத் திரும்பச் சொல்லும் வழக்கம் எனக்குக் கிடையாது!" என்று சொல்லிக் கொண்டே, அந்தக் கெட்டிக்காரக் கொக்கு கண்டு பிடிக்கப் போயிற்று!

10. கட்டுரை :

## கொம்புகள்

"அம்பி"

ஆட்டுக்கும் மாட்டுக்கும் கொம்பு உண்டு. குதிரைக்குக் கிடையாது. அதனால் தான் இந்தப் பஞ்ச காலத்தில் குதிரைக் கொம்பு ரொம்பப் பிரபலமாகி இருக்கிறது.

திடீரென்று குதிரைக்குக் கொம்பு முளைத்து விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது நரிக்கும் கொம்பு முளைத்துவிடும். எப்படி என்று என்னைக் கேட்காதீர்கள்!

மனிதனுக்குக் கொம்பு முளைத்து விட்டால் என்ன செய்வது? செய்வது என்னத்தை? சில காரியங்களைச் செய்ய முடியாது; அவ்வளவுதான்! அதாவது, சிரசாசனம் போட முடியாது; கரகம் எடுத்து ஆட முடியாது; கிராப் வைத்துக் கொள்ள முடியாது; தொப்பி வைத்துக் கொள்ள முடியாது; மாடு என்று ஒருவரை யொருவர் திட்டிக்கொள்ள முடியாது. நல்லதுதானே?

மனிதனுக்குக் கொம்பு முளைத்தால் பரவாயில்லை; வால்தான் முளைக்கக் கூடாது!

11. புத்தக விமர்சனம் :

[எழிலரசி அழகி. ஆசிரியர்: "அழகு ராஜ்"; பிரசுரம்: சௌந்தர்ய நூலகம்; விலை: போடவில்லை.]

அழகான அட்டை; அழகான அச்சடிப்பு; அழகான கதைகள்; அழகான நடை. இதை வாங்கிப் படிப்பதே நேயர்களுக்கு அழகு!

12. ஆசிரியர் குறிப்பு :

எல்லாம் ரொம்ப ரொம்ப நன்றாயிருக்கிறது அல்லவா? நிறையப் பாராட்டுக் கடிதங்கள் எதிர்பார்க்கிறேன். ஏமாற்ற மாட்டீர்களே?


ஆமணக்
கெண்ணெய்
ஆமணக்கெண்ணெய்களில் பல விதங்களுள்ளன. ஆனால் ஸ்வஸ்திக் கம்பெனியாரின் ஒளஷதத்துக்குரிய ஆமணக்கெண்ணெயே யாவற்றிலும் உயர்ந்தது. இது இந்தியாவிலேயே சிறந்த எண்ணெய் சுத்தி செய்யப்படும் ஆலையில் நவீன சாஸ்திரிய முறையில் செய்யப் பட்டு, நிறம், ருசி, வாசனை யற்றது.
இதர உயர்தர ஸ்வஸ்திக் தயாரிப்புகள்:—பரிமள ஆமணக் கெண்ணெய், காந்தி ஸோப், கோலாகின் பிராண்ட் வனஸ்பதி, முதலியன.
ஸ்வஸ்திக்
மெடிஸினல்காஸ்டர்ஆயில்
குணத்துக்கு நிகரற்றது.
ஸ்வஸ்திக்ஆயில் மில்ஸ் லிமிடெட்
பம்பாய்.
SHILPI
Sam. 23—Tamil



# அந்தப் பௌர்ணமி

பகீரதன்

அன்புள்ள பரந்தாமனுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. என்னுடைய கலியாணத்தைப் பற்றி நீ எழுதி யிருக்கும் பதிலைப் பார்த்ததும் எனக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது. சீர்திருத்த மனப்பான்மையுள்ள நீயே இப்படி எழுதினால் நான் என்ன செய்வது? இருந்தாலும் என்னுடைய நிலைமையில் நீ இருந்திருந்தால் அவ்வாறு எழுதி இருக்க மாட்டாய் என்றே நான் நினைக்கிறேன்.

நாகப்பட்டணம் பள்ளிக்கூடத்தில் நம்முடன் பத்தாம் வகுப்பு வரை ஒன்றாகப் படித்து வந்தாளே பார்வதி, அவளைப் பற்றித்தான் நான் எழுதி யிருந்தது. பார்வதியின் தற்போதைய நிலைமையையும் என்னுடைய நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்து, நீ எனக்கு ஒரு சரியான வழி காட்டுவாய் என்று நான் நம்புகிறேன்.

* * *

பார்வதி பத்தாம் வகுப்போடு தன்னுடைய படிப்பை நிறுத்திக் கொண்டு விட்டாள். பெண்களுக்கு அவ்வளவு தூரம் படிப்பு இருந்தால் போதும் என்று நிறுத்தவில்லை; காலா காலத்தில் கல்யாணம் செய்துகொண்டு, இல்வாழ்க்கையில் ஈடுபட வேண்டும் என்று அவள் தகப்பனார் கண்டிப்பாகச் சொன்னதால்தான் படிப்பை நிறுத்தினாள். என்னதான் இருக்கட்டுமே, சில விஷயங்களில் பெண்களுக்கு எதிர்த்துப் பேசத் தைரிய மில்லாமற் போய்விடுகிற தல்லவா?

பரந்தாமா, உனக்குப் பார்வதியைப் பற்றித் தெரியாதா? அவளைப்பற்றி எவ்வளவோ நான் உன்னிடம் சொல்லி யிருக்கிறேனே! அன்பு ததும்ப அவள் எனக்கு எழுதிய எத்தனையோ கடிதங்களை நான் உனக்குக் காட்டி யிருக்கிறேனே! பார்வதியைப் பற்றிய பேச்சில் நேரம் போவதே தெரியாமல் நான் எத்தனையோ இரவை உன்னுடன் பேசிப் பேசிக் கழித்திருக்கிறேனே! அப்பொழு தெல்லாம் என்னுடைய எதிர்காலத்தைப் பற்றியும், வரப்போகும் எங்கள் காதல் வாழ்க்கையைப் பற்றியும் நீ வாயாரப் புகழ்ந்தா யல்லவா?

பார்வதியின் தகப்பனாராகிய என் மாமாவும், இந்த உலகத்தில் எனக்கு அன்புத் தெய்வமாக விளக்கும் என் அருமைத் தாயாரும், நல்லவேளையாக நானும் பார்வதியும் கலியாணம் செய்து கொள்வதைத் தடுக்க வில்லை. ஆனால் நான் மட்டும் பி. ஏ. பரீட்சை 'பாஸ்' செய்த பிறகுதான் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்று தீர்மானித்திருந்தேன். நம்முடையவளேயான பார்வதி நம்மை விட்டு எங்கே போய்விடப் போகிறாள் என்ற தைரியம் எனக்கு!

ஒருநாள் காலை என்னுடைய மாமா என்னிடம் வந்து, பார்வதியின் கலியாண விஷயமாகப் பேசினார். பார்வதிக்கு வயதாகி விட்டபடியால், இந்த வருஷத்திலேயே கலியாணத்தை முடித்து விடவேண்டும் என்று அவர் சொன்னார். உனக்குத் தான் தெரியுமே, என்னுடைய பிடிவாத குணம் — பி. ஏ. பட்டம் பெறும் வரையில் கலியாணம் என்ற பேச்சே கூடாது என்று சொல்லி விட்டேன்.

மனிதர்களுடைய மனத்தைப் பற்றி என்ன சொல்லுவது என்றே தெரியவில்லை. என்னுடைய பதில் மாமாவின் மனதில் எப்படிப் பட்டதோ என்னவோ, அவர் கோபத்துடன், "உன்னை விட்டால்

வேறு மாப்பிள்ளை கிடையாது என்று நினைத்து விட்டாயோ? இதோ பார், அடுத்த மாதமே பார்வதிக்குக் கலியாணத்தை முடித்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன்!" என்று சொல்லிவிட்டு 'விர்'ரென்று போய் விட்டார்.

எதிர்பாராமல் ஏற்பட்ட இந்தச் சம்பவம் என் மனதை ரொம்பவும் பாதித்துவிட்டது. நான் பார்வதியைத் தனிமையில் சந்தித்து, "பார்வதி, உன் அத்தானுக்காக உன் தகப்பனாரிடம் நீ ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? எனக்காக நீ இன்னும் ஒரே ஒரு வருஷம் காத்திருக்கக் கூடாதா?" என்றேன்.

இது விஷயத்தில் பெண்ணாய்ப் பிறந்திருக்கும் அவள் என்ன செய்வாள், பாவம்! ஒரே விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையே கண்ணீரைப் பெருக்க விட்டுக் கொண்டு பேசாமல் நின்றாள்!

என்மீது கொண்ட அற்ப அபிப்பிராய பேதம் காரணமாக, பச்சைக் கிளி போன்ற என் பார்வதியைப் படுகுழியில் தள்ளவும் துணிந்து விட்டார் மாமா. மாப்பிள்ளைகள் என்ன, சைனா பஜாரில் வாங்கிவிடும் சரக்கா என்ன? எங்கெங்கேயோ தேடி அலுத்துப்போன அவர், கடைசியில் இரண்டாந்தாரமாகக் கூட யாருக்காவது பார்வதியைக் கொடுத்து விடுவது என்ற முடிவுக்கு வந்து விட்டார். சுயநலமே பெரிதாக மதிக்கும் சில பண மூட்டைகள், வயது நாற்பதுக்குமேல் ஆன சில நயவஞ்சகர்கள் பார்வதியை மணக்க முன் வந்தார்கள். அவர்களில் ஒருவன்தான் ஹைதராபாத் சமஸ்தானத்தில் உள்ள ஒரு பிரபல வியாபாரி. அவனுக்குப் பார்வதியைக் கொடுப்பதாகத் தீர்மானித்து விட்டனர். அப்புறம் என்ன? பணத்தைத் தவிர வேறொரு யோக்யதாம்சமும் இல்லாத அவனுக்கு இரண்டாந் தாரமாக வாய்க்கப் பெற்றாள் பார்வதி. அவள் தன் கலியாணப் பத்திரிகையோடு, எனக்குக் கடைசியாக ஒரு கடிதமும் எழுதியிருந்தாள். அதற்கு நான் எழுதிய பதில் இதுதான்:

"பார்வதி, இன்று உனக்கு எப்படியோ ஒரு வாழ்க்கைத் துணைவன் கிடைத்து விட்டான். ஆனால், ஒரு காலத்தில் உன்னைத் தவிர வேறு யாரையும் மனதாலும் நினைக்காத நான் இன்று தனியனாகிவிட்டேன். இல்லை, தனிமையாக்கப்பட்டு விட்டேன். இனி என்றும் தனிப்பட்டவன்தான்! 'கடவுள் உங்களைத் தனிமையில் இருக்க விடுவாரா?' என்று நீ கேட்கலாம். 'உள்ளத்திலே உண்டாகும் உண்மையான உணர்ச்சிகளைத்தான் கடவுள் செயல் என்று உலகம் சொல்லுகிறது' என்பதை நீ உணர்ந்தால், என்னை அவ்வாறு கேட்கமாட்டாய்! நிகழ் காலத்தில் அந்த உண்மையை உணரா விட்டாலும், எதிர்காலத்திலாவது உணர்வாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எது எப்படியானாலும் என்னுடைய பிரார்த்தனை, நீ எல்லா சௌக்கியங்களும் பெற்று வாழவேண்டும் என்பதே!

அன்பு."

எனக்கு வீம்பாகப் பார்வதிக்கு உடனே கல்யாணத்தை முடித்து விட்டதைப் பற்றி என் மாமாவுக்குப் பரம சந்தோஷம். பார்வதியைப் போன்றவர்களின் சந்தோஷத்தைப் பற்றித்தான் என் மாமாவைப் போன்றவர்கள் கவலைப்படுவதே யில்லையே! ஆகவே, நானும் அதைப் பற்றிக் கவலைப் படவில்லை. ஆனாலும் அவளுடைய சந்தோஷம் ஒரு சில நாட்களாவது நீடித்திருக்கக் கூடாதா? அதுதான் இல்லை!

கலியாணமான மூன்றாம் நாள் ஹைதராபாத்திலிருந்து ஒரு தந்தி வந்ததாம், "நேற்றிரவு நம்முடைய கடைகளில் கொள்ளைக்கூட்டத்தார் புகுந்து நாசம் செய்து விட்டனர். உடனே வரவும்" என்று. நீ கூடப் பத்திரிகைகளில் படித்திருப்பாயே, நிஜாம் சர்க்காரின் கெடுபிடியை. அந்த அட்டூழியத்தின் விளைவாகப் பார்வதியின் கணவனுடைய கடைகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு விட்டன. பாவம், அந்தத் தந்தியைப் பார்த்ததும், அரை மணேரோடுதான் அவன் ஹைதராபாத்துக்குப் போனானாம்.

அன்று போனவன் திரும்பி வரவேயில்லை. அவன் சூறையாடப்பட்ட தன் கடைகளைப் பார்த்துக் கொண்டிருந்த போது, திடீரென்று லாரியில் வந்து இறங்கிய காலிகள் அவனைக் கத்தியால் குத்திக் கொன்று விட்டார்களாம்!

அவ்வளவுதான்; உலகமறியாத பார்வதி, உலகமறிந்த விதவையாகி விட்டாள்!

இனி அவளை யார் என்ன தேற்றி என்ன பயன்? நீ அடிக்கடி புகழ்ந்து சொல்லுவாயே, பார்வதியின் நெற்றியில் சிவப்பு வயிரம்போல் திகழும் குங்குமப் பொட்டைப் பற்றி. அந்தத் திலகத்தை இனி நாம் பார்க்க முடியுமா?

விஷயத்தைக் கேள்விப்பட்ட நான் பார்வதியைக் காண விரைந்து சென்றேன். என்னைக் கண்டதும் மாமா கட்டிப் பிடித்துக் கொண்டு கதற ஆரம்பித்து விட்டார். தந்தப் பதுமை போலிருந்த பார்வதி தான் குலைந்து கிடந்தாள். சலனமற்று நிர்மலமாக இருக்கும் அவள் கண்களிலே சஞ்சலம் குடி கொண்டிருந்தது.

என்னுடைய மாமாவின் வேண்டுகோளுக் கிணங்க, நான் தினசரி அவளுடைய வீட்டுக்குச் சென்று, பார்வதிக்கு ஆறுதல் சொல்லி வந்தேன். ஆனால் பார்வதியைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும். இதனால் ஆறுதலை வேண்டிய அவளே, எனக்கு ஆறுதல் சொல்லுவதின் மூலம் தானும் ஆறுதல் அடைந்து வந்தாள்!

என்னுடைய மாமாவோ நான் கொஞ்சமும் எதிர்பாராத விதமாக அடியோடு மாறி விட்டார். அவர் விதவா விவாகத்தைப் பற்றியும், பால்ய விதவைகள் மறுமணம் செய்து கொள்வதில் தவறில்லை என்பது பற்றியும் எழுதியிருக்கும் பல ஆசிரியர்களின் புஸ்தகங்களைக் கொண்டு வந்து பார்வதிக்குப் படித்துக் காண்பித்தார். என்னையும் அவளையும் படிக்கும்படி தூண்டினார். அப்பப்பா! எத்தனை புஸ்தகங்கள்! எங்கிருந்துதான் கொண்டு வருவாரோ, தெரியவில்லை.

வீணாகக் கடிதத்தை நீட்டி உன் பொறுமையைச் சோதிப்பதில் பலன் என்ன? உண்மையை எழுதிவிட வேண்டுமல்லவா? எத்தனையோ நாட்கள் சென்றும் நான் விரும்புவது போல் பார்வதியும் என்னை விரும்புகிறாளா என்பதைத் தெரிந்து கொள்ள என்னால் முடியாமலே இருந்தது. அவளுடைய உள்ளத்தைக் கண்டுபிடிக்க நான் எடுத்துக் கொண்ட அத்தனை முயற்சிகளும் தோல்வி யடைந்து விட்டன. நானும் பொறுமையை இழந்து விட்டேன்.

* * *

அன்றையதினம் பௌர்ணமி. என்னுடைய மனதிலும் களங்கமற்ற தைரியம் உதயமாகியிருந்தது. பார்வதியிடம் அவளுடைய அபிப்பிராயத்தைக் கேட்டே விடுவது என்று தீர்மானித்து விட்டேன்.


"பார்வதி, உன்னை யார் வேணுமானாலும் 'விதவை' என்று சொல்லட்டும்; நான் மட்டும் உன்னைப் பழைய பார்வதியாகவே மதிக்கிறேன். நீ ஒரு வார்த்தை........." என்று ஆரம்பித்தேன்.

"அத்தான், நானும் உங்களைப் பழைய அத்தானாகவே மதிக்கிறேன்; ஆனால்..." என்று இழுத்தாள்.

"ஆனால், என்ன?" என்று கேட்டேன்.

பார்வதி என்ன நினைத்தாளோ என்னமோ, கனிவு ததும்ப என்னை ஒரு கணம் பார்த்தாள். பிறகு, "அடுத்த பௌர்ணமி வரை பொறுத்திருங்கள்!" என்றாள்.





"அட, கடவுளே ! இந்த விறகைக் கண்டெடுப்பதற்குத்தானா இத்தனை கஷ்டப்பட்டு இந்த இரும்புப் பெட்டியைத் திறந்தேன் ?"

நான் அடுத்த பௌர்ணமியை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். வானத்துச் சந்திரன் வழக்கம் போல் தேய்ந்து தேய்ந்து மறைந்து, மீண்டும் வளர ஆரம்பித்தான். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த அவன், பதினைந்து நாட்களுக்குப் பிறகு— இல்லை, பதினைந்து யுகங்களுக்குப் பிறகு பூரண சந்திரனானான். ஆனால், அந்தப் பௌர்ணமி என் தலையில் இப்படிக் கல்லைத் தூக்கிப்போடும் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

வழக்கத்துக்கு விரோதமாக அன்று பார்வதி என்னிடம் விசேஷ அன்பு காட்டினாள். மனம் கவரும் மாலை நேரம் வந்ததும், "அத்தான், இன்று கடற்கரைக்குப் போவோமா ?" என்று கேட்டாள்.

நான் எல்லையற்ற ஆவலுடன், "சரி" என்றேன்.

கடற்கரைக்கு வந்து சேரும் வரை அவள் ஒரே மௌனமாக என்னுடன் நடந்து வந்தாள். சொல்லி வைத்தது போல் ஓர் இடத்தில் இருவரும் சேர்ந்து உட்கார்ந்தோம். கடல் அலைகள் ஓயாமல் ஒழியாமல் கரையை நோக்கி வருவதும் போவதுமாக அலைந்து கொண்டிருந்தன. பார்வதியிடமிருந்து வரப்போகும் பதிலை எதிர் நோக்கி, என்னுடைய மனமும் அலைந்து கொண்டிருந்தது.

பார்வதியின் அந்த நீண்ட மௌனத்தை என்னால் தாங்கவே முடியவில்லை. மனதை ஒருவாறு தைரியப்படுத்திக் கொண்டு, "பார்வதி !" என்றேன் கம்பிய குரலில்.

களங்கமில்லாதிருந்த அவளது கண்களிலே ஒரு காம்பீர்யம் தோன்றிற்று. "அத்தான் ! இன்று உங்களுக்கு என் மனதைத் திறந்து காட்டிவிடுகிறேன் !" என்றாள்.

என் மனம் இன்னும் கொஞ்சம் வேகமாகவே அலைய ஆரம்பித்து விட்டது. ஆவலோடு அவளது முகத்தைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தேன்.

"நீங்கள் என்மீது கொண்டிருக்கும் அன்பு காரணமாகச் சொல்லுகிறேன். நீங்கள் என்னை மறந்துவிட்டு வேறு ஒரு கன்னிப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதைத்தான் என் கண்கள் பார்க்க விரும்புகின்றன!" என்றாள் பார்வதி.

"அதோ, கரை தெரிகிறது !" என்று ஆனந்தமாக வந்த என் கப்பல், தடாலென்று பாறையில் மோதிச் சுக்கு நூறுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. சிறிது நேரம் 'எங்கிருக்கிறோம், என்ன செய்கிறோம் ?' என்ற உணர்ச்சியே இல்லாமலிருந்தேன். பிறகு, ஒரு பெரும் பிரயத்தனம் செய்து, "என் ?" என்று கேட்டு வைத்தேன்.

"அத்தான், என்ன இருந்தாலும் நான் ஏற்கெனவே ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டவளாகிவிட்டேன். இனி நான் கல்யாணம் செய்து கொள்வதாயிருந்தால், யாராவது மனைவியை இழந்த ஒருவனைத் தான் இரண்டாந்தாரமாகக் கல்யாணம் செய்து கொள்வதென்று முடிவு செய்திருக்கிறேன். உங்கள் பார்வதிக்கு நீங்கள் அன்புடன் ஏதாவது செய்ய வேண்டுமென்றால், இந்த உதவியைத்தான் செய்ய வேண்டும் !" என்றாள் பார்வதி.

சிறிது நேரம் நான் மௌனமாக இருந்தேன். ஒன்றுமே சொல்லத் தோன்றவில்லை எனக்கு. பேசாமல் எழுந்து வீட்டை நோக்கி நடந்தேன். அவளும் எழுந்து என்னைப் பின் தொடர்ந்து வந்தாள். இருவரும் அன்று வீட்டை யடைந்ததும் பிரிந்தோமே, அவ்வளவுதான் — அதற்குப் பிறகு நான் அவளைச் சந்திக்கவே யில்லை.

என் அருமை நண்பா ! பார்வதியின் எதிர்பாராத பதிலால் திக்குத் தெரியாமல் தவிக்கும் எனக்கு, உன்னுடைய கடிதம் வழி காட்டுமா ?

அன்புள்ள,

அமிர்தலிங்கம்.



# மழை ஓய்ந்தது

சோமபாலா

சுந்தரேசன் அந்தத் தெருவில் ஐந்து வருஷங்களாகக் குடியிருக்கிறான். அவன் வீட்டுக்கு எதிரிலிருந்த மாடி வீட்டில் மட்டும் சேர்ந்தாற்போல் மூன்று மாதங்களுக்கு மேல் யாரும் குடியிருந்தது கிடையாது.

அன்றைய தினம் சுந்தரேசன் ஆபீஸிலிருந்து வந்ததும் எதிர் வீட்டு மாடியில் ஓர் அற்புதக் காட்சியைக் கண்டான். அழகாகப் படிய வாரிப் பின்னியிருந்த தலை; கனகாம்பரப் பூவோடு ஒரு சம்பியமான நீல வர்ணப் பூவையும் சேர்த்து வளையல் மாதிரி வளைத்துக் கட்டியிருந்தாள். ஆகாய வர்ணப் புடவை பூங்கொடி போன்ற அவள் உடலுக்கு நன்றாய்த்தானிருந்தது. காதில் வைடூரிய லோலாக்குகள் பளிச்சுப் பளிச்சென்று மின்னிக் கொண்டிருந்தன. ஆம், அந்த அழகியின் முதுகுப்புறம்தான் சுந்தரேசனுக்குத் தெரிந்தது. அவள் யாருடனோ நின்று பேசிக் கொண்டிருந்தாள்.

சுந்தரேசனுக்கு அவளைப் பார்த்ததும் ஆச்சரியமாய்ப் போய்விட்டது. இத்தனை நாட்களாகப் பெண் குரலே கேட்காத வீட்டில் இன்று அவளைப் பார்த்ததும் அவனுக்கு ஆச்சரியம் உண்டாகாதா? அவள் யார்? சுந்தரேசனால் ஊகிக்க முடியவில்லை. அவள் யாராயிருந்தால் என்ன? ஆனால் சுந்தரேசனால் அவளைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை!

"பார்த்தது போதும்! கழுத்து சுளுக்கிக் கொள்ளப் போகிறது!" என்று அவன் மனைவி சாரதா கூறியதும், சுந்தரேசன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

"நானும் ஒரு நாழியாகக் கவனிக்கிறேன். அப்படித்தான் பிறர் வீட்டுப் பெண்களைப் பார்க்கிறதோ? பார்க்கிற பார்வையில் அவளை விழுங்கி விடுவீர்கள் போலிருக்கிறதே! அவளும் இதைக் கவனித்தால் என்னவாகும்?" என்று சாரதா சரமாரியாகப் பொழிந்து தள்ளினாள்.

எதிர்பாராத இந்தத் தாக்குதல் சுந்தரேசனின் முகத்தில் அசடு வழியச் செய்தது. "நான் ஒன்றும் தப்பெண்ணத்தோடு பார்க்கவில்லையே! அழகு எங்கேயிருந்தாலும் ஒரு ரசிகனுக்கு அதை ரசிக்க உரிமையுண்டு. ஒரு நல்ல ரோஜா மலரைப் பார்க்கும்போது என்ன பாவத்தோடு பார்க்கிறோமோ......!"

"போதும் போதும், உங்கள் காவியப் பிரசங்கம்! இன்னும் தப்பெண்ணத்தோடு பார்த்தால் எப்படிப் பார்ப்பீர்களோ?" என்று கூறி, சாரதா முகத்தை ஒரு திருப்புத் திருப்பி, முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டு உள்ளே போனாள்.

அப்பப்பா, அப்போது அவள் அவனைப் பார்த்த பார்வையைப் பார்க்க வேண்டுமே! சுந்தரேசனுக்கு இதற்கு மேலே இது வளர்ந்து கொண்டு போனால் என்ன விபரீதம் நேரும் என்று தெரியும். உடனே கடைசித் தடவையாக எதிர்வீட்டு மாடியை ஒரு பரிதாபப் பார்வை பார்த்து விட்டுக் கீழே இறங்கினான்.

★

இந்த நாடகம் நீடித்து நடந்து கொண்டேயிருந்தது. ஆபீஸிலிருந்து வந்ததும் சுந்தரேசன் மாடிக்குப் போய் உடைகளைக் கழற்றிவிட்டு வராந்தாவின் பக்கம் உலாவுவது வழக்கமாகப் போய்விட்டது. இப்பொழுதெல்லாம் அவள் பார்க்கவேண்டும் என்று அவன் காத்திருப்பதில்லை. அவளே அவன்மீது குளிர்ச்சி நிறைந்த தன் பார்வையை அடிக்கடி செலுத்தினாள். இல்லை, சுந்தரேசன் அப்படி நினைத்தான்.

அவன் நாற்காலியில் சாய்ந்து கொண்டு பத்திரிகை படிப்பான்; அவளும் அப்பொழுது வீதிப்புறம் வந்து நிற்பாள். சந்த்ரசேன் ஒரு முறை அவளைப் பார்த்து விட்டு, 'இனிமேல் அந்தப் பக்கமே பார்ப்பதில்லை' என்று ஒரு திடசங்கல்பம் செய்து கொண்டு பத்திரிகை படிப்பதிலேயே ஆழ்ந்திருப்பான். ஆனால் அவன் கண்களும் மனமும் அவனை ஏமாற்றி, அவனது திடசங்கல்பத்தையும் பொடிப் பொடியாகத் தகர்த்து எறிந்துவிடும்.

"என்ன இது! நான் அவளைப் பார்த்தால் தவறு, அவள் என்னைப் பார்த்தால் தவறில்லையா? ஆண் மகனாகிய எனக்கிருக்கும் வெட்கங்கூட அவளுக்கு இல்லையே! ஒரு பெண்ணுக்கு இவ்வளவு தைரியம் இருந்தால் நான மட்டும் அவளுக்குச் சளைத்தவனா என்ன? பார்ப்போமே!" என்று என்ன அலைகள் அவன் மனதில் ஓடின.

"இந்தாருங்கள், இன்றைக்குச் சில்லென்றிருக்கிறது. பச்சைத் தண்ணீரில் குளிக்க வேண்டாம். வெந்நீர் போட்டிருக்கிறேன் ......!" என்று கூறிக்கொண்டே வந்த சாரதா, பாதியில் பேச்சை நிறுத்தி விட்டு எதிர்வீட்டு மாடியையும் சந்த்ரசேனையும் எரித்து விடுபவள்போல் பார்த்தாள். சந்த்ரசேன் வாய் திறவாமல் எழுந்திருந்தான்.

ஸ்நானம், சாப்பாடு, ஆபீஸ் புறப்பாடு முதலிய யாவும் மௌனமாகவே நடந்தன. சட்டை போட்டுக்கொண்டு சந்த்ரசேன் ஆபீஸுக்குப் புறப்படும்போது, சாரதா மௌனமாக வெற்றிலையை மடித்து அவன் கையிலே கொடுத்தாள்.

சந்த்ரசேன் அதைக் கையில் வாங்கிக் கொண்டு, "இன்றைக்குச் சாயங்காலம் சீக்கிரம் வந்துவிடுவேன். 'டிரஸ்' பண்ணிக் கொண்டு தயாராயிரு. சினிமாவுக்குப் போகலாம்!" என்று கூறினான்.

அதற்குச் சாரதாவிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. சந்த்ரசேன், சாரதாவின் இந்த மாதிரியான மௌன விரதங்களை எத்தனையோ தடவை சினிமா அஸ்திரத்தைப் பிரயோகித்துக் கலைத்திருக்கிறான். ஆகையால் எப்படியும் சாயங்காலம் அவளைப் பேசச் செய்து விடலாம் என்று நிர்மானித்துக் கொண்டு, ஆபீஸுக்குப் போய்விட்டான்.

★

சந்த்ரசேனின் போதாத காலம்தானோ என்னவோ, அன்றைக்கு அவன் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வரும்போதே மணி ஏழரையாகி விட்டது. வீடு மனித சஞ்சாரமே இல்லாத கானகம் போலிருந்தது. சாரதா ஒரு பழைய புடவையைக் கட்டிக்கொண்டு தலைகூட வாரிப் பின்னிக் கொள்ளாமல் காட்சி அளித்தாள். சந்த்ரசேனுக்கு அவள் முகத்தைப் பார்ப்பதற்கே தைரியமில்லை. குற்றவாளிமாதிரி விழிவிழித்து என்று உள்ளே போய் உடைகளை மாற்றிக் கொண்டான்.



"சாரதா!"

"ஏன்?"

"இன்றைக்கு நான் காலையில் சொன்னபடி சீக்கிரம் ஆபீஸிலிருந்து வரமுடியவில்லை. சாப்பிட்டுவிட்டு இரண்டாவது காட்சிக்குப் போகலாமா? எங்கே, எல்லாம் தயார்செய் பார்ப்போம்!"

"நான் வரவில்லை. நீங்கள் போங்கள்...!"

"ஏன்? உடம்புக்கென்ன? ஒருமாதிரியிருக்கிறாயே!"

"ஆமாம்; என்னைப் பார்த்தால் ஒரு மாதிரியாய்த்தான் இருக்கும். நான் என்ன அழகாயிருக்கிறேனா?"

இதற்குமேல் அவர்கள் சம்பாஷணை நடக்கவில்லை. சாரதாவின் விம்மல்தான் கேட்டது.

எப்படி அவளைச் சமாதானப் படுத்துவது என்று சுந்தரேசனுக்குப் புரியவில்லை.

"சாரதா, சுத்த அசடாயிருக்கிறாயே!" என்று சுந்தரேசன் ஏதோ மேலே கூறுவதற்குள் சாரதா சமையலறைக்குச் சென்று விட்டாள்.

சுந்தரேசனும் சமையலறைக்குப் போனான்.

"நான் ஒன்றும் அசடு இல்லை. நீங்கள் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரிந்துதா னிருக்கிறது. இன்று சாயங்காலம் எதிர் வீட்டுக்குப் போயிருந்தேன். அவளோடு பேசிக் கொண்டிருந்தேன். அவள் என்ன சொன்னாள், தெரியுமா?......"

"என்ன சொன்னாள்?"

இப்படிக் கேட்கும்போது சுந்தரேசன் முகத்திலும் குரலிலும் கொஞ்சம் திகில் கலந்திருந்தது.

"என்ன சொன்னாளா? 'உங்கள் வீட்டுக்காரருக்கு என்ன புத்தியே கிடையாதோ? பிறத்தியார் வீட்டுப் பெண்களைப் பார்ப்பது என்றால், அதற்கு ஒரு அளவே கிடையாது போலிருக்கிறது! ஆளையே விழுங்கிவிடுகிற மாதிரி பார்க்கிறாரே!' என்று அவள் சொன்னதைக் கேட்ட போது, எனக்கு எப்படியிருந்தது, தெரியுமா?"

சுந்தரேசனுக்கும் அதைக் கேட்டதும் ஏதோ ஒரு மாதிரிதான் இருந்தது.

"அந்த வீட்டுக்கு நீ ஏன் போனாய்? அவள் குடித்தனக்காரி யில்லையாமே! ஆபீஸில் ஒருவர் சொன்னார்!"

"ஓகோ, அப்படியா சமாசாரம்! ஆபீஸ் வரையில் இந்தப் பேச்சு போய் விட்டதா!"

அதற்குமேலே பேச முடியாமல் துக்கம் அவள் தொண்டையை அடைத்தது.

சுந்தரேசனுக்கும் மேலே ஒன்றும் பேச முடியவில்லை.

★

அன்று மத்தியானத்துக்கு மேலே சரியான மழை பிடித்துக் கொண்டது.



'ஹோ' என்று ஒரே சத்தம். சுந்தரேசன் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்தபிறகு, இந்த மழை பிடித்துக் கொள்ளக் கூடாதா? அதுதானே இல்லை! அவன் ஆபீஸை விட்டுக் கிளம்புகிறதற்கும் மழை பிடித்துக் கொள்ளுவதற்கும் சரியாயிருந்தது. இந்த மழையில் நனையாமல் போய்ச் சேர, 'நன்குடை' அளிக்கும் 'குடையாளிகள்' யாரேனும் இருக்கிறார்களா என்று சுந்தரேசன் தேடினான். நல்ல வேளையாகச் சுந்தரேசனின் நண்பரொருவர் ஆபத்பாந்தவனாகக் குடையுடன் வந்து தன் ஒரு குடைக் கீழ் அவனுக்கும் தஞ்சம் அளித்தார். தெரு முனைக்கு வந்ததும் சுந்தரேசன், "நான் இனிமேல் போய்விடுவேன், நீங்கள் போங்கள், ஸார்! பாவம், உங்களுக்குச் சிரமம் கொடுத்து விட்டேன்!" என்று கூறிக்கொண்டே ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி விரைந்தான்.

வீட்டு வாசலை யடைந்ததும் சுந்தரேசன் முகத்தைத் துடைத்துக் கொண்டான். வாசற் கதவு தாளிட்டிருந்தது. எதிர் வீட்டு மாடியை நோக்கினான். அங்கே இருள் சூழ்ந்திருந்தது.

ஒரு கணம் சுந்தரேசனின் மனம் தத்தளித்தது. வீட்டுக்குள்ளே போனால் வருந்தி யழைக்க யார் இருக்கிறார்கள்? சாரதா தான் ஒத்துழையாமை இயக்கம் நடத்துகிறாளே! வேண்டுமென்றே பழைய புடவையைக் கட்டிக்கொண்டு அசோக வனத்துச் சீதை மாதிரி சோக சிகரமாக

விளக்கப் போகிறாள் சாரதா! அவளை என்ன பார்க்க வேண்டிக் கிடக்கிறது!

அடுத்த கணம் சந்த்ரசேனின் மனத்தில் எதிர் வீட்டு ஒய்யாரி தோன்றினாள். அவளிடம் சுமுகமான வரவேற்புக் கிடைக்குமா?

அவ்வளவுதான்; இந்த எண்ணம் தோன்றியதும் சந்த்ரசேன் எதிர் வீட்டுக்கு ஓடினான். விடுவிடு என்று வாசற்படியில் ஏறினான். கதவின் அருகே சென்று பார்த்தான். அப்பொழுது வானத்தில் 'பளீர்' என்று ஒரு மின்னல் மின்னியது. அந்த மின்னல் வெளிச்சத்தில் அவ் வீட்டுக் கதவைச் சாத்திப் பூட்டியிருந்த பெரிய 'அலிகார்' பூட்டு பளிச்சென்று தெரிந்தது.

உடனே சந்த்ரசேனின் சுயபுத்தியும் பளிச்சென்று தன் நிலைக்கு வந்தது. அவன் முன்பு கொண்டிருந்த படபடப்பு நீங்கித் தன் வீட்டை நோக்கித் திரும்பினான்.

சாரதா புதுப் புடவை யுடுத்திக்கொண்டு பூரணப் பொலிவுடன் விளங்கினாள்.

“மழையில் ரொம்ப நனைந்துவிட்டீர்களா? என்ன விலையானாலும் ஒரு குடை வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னேனே!—வாருங்கள், உடைகளை மாற்றிக் கொள்ளுங்கள்!” என்று சாரதா கனிந்த குரலில் கூறினாள்.

சந்த்ரசேன் மாடிக்குச் சென்று உடைகளை மாற்றிக் கொண்டான். மாடி வராந்தாவின் பக்கம் திரும்பி எதிர் வீட்டை ஒரு பார்வை பார்த்தான்.

உடனே சாரதா அவனை ஒரு அர்த்தங் கலந்த பார்வை பார்த்துக்கொண்டே, “நல்ல வேளையாக அந்தச் சனியன் பிடித்தவள் நுங்கம்பாக்கத்துக்குக் குடி போய் விட்டாள். வாருங்கள், காற்று ஒரு மாதிரி வீசுகிறது!” என்றாள்.

சந்த்ரசேன், “ஓகோ!” என்றான் எங்கேயோ பார்த்துக் கொண்டே.

வெளியே மழை பூரணமாக நின்று விட்டது. மேகத்திரையை விலக்கிக் கொண்டு சந்திரனும் எட்டிப் பார்த்தான். சந்த்ரசேன் வீட்டிலேயும் சில நாட்களாகத் தூறிக்கொண்டிருந்த மழை ஓய்ந்துவிட்டது!

# காலக்ஷேபம்

### காணவில்லை

கந்து :—இன்னுமா அந்தக் கெட்டுப்போன காலணாவைத் தேடிக் கொண்டிருக்கிறாய்?

சந்து :—இல்லை, இல்லை. காலணா அகப்பட்டு விட்டது. என் தம்பி கண்டு பிடித்து எடுத்தான்.

கந்து :—பின் நீ என்ன தேடுகிறாய்?

சந்து :—தம்பியைத்தான்!

★

### பல் வைத்தியம்

நோயாளி :—ஐயோ, அந்தப் பல் இல்லை, நான் பிடுங்க வேண்டும் என்று சொன்னது!

பல் வைத்தியர் :—சும்மா இரு, ஐயா! ஒவ்வொன்றாகத்தானே பிடுங்கிக் கொண்டு வர வேண்டும்?

★

### கீழே வை!

போக்கிரி :—சமீபத்தில் யாராவது போலீஸ்காரனைப் பார்த்தாயா, அப்பா?

வழிப்போக்கன் :—இல்லை, தம்பி!

போக்கிரி :—நிச்சயமாகவா, அப்பா?

வழிப்போக்கன் :—நிச்சயமாய்த்தான், தம்பி!

போக்கிரி :—அப்படியானால் உன் கடிகாரத்தையும் மணிபர்ஸையும் கீழே வை, அப்பா!

### தண்டச் செலவு!

உபாத்தியாயர் :—கிட்டு, உன்னிடம் பத்து ரூபாய் இருக்கிறது என்று வைத்துக் கொள். அதில் இரண்டு ரூபாய் கீழே விழுந்து கெட்டுப்போய் விட்டது......

கிட்டு (குறுக்கிட்டு) :—வேண்டாம், ஸார்! அந்த இரண்டு ரூபாயையும், பள்ளிக்கூடச் சம்பளம் கொடுத்ததாக வைத்துக் கொள்கிறேன்.

★

### ஆச்சரியமில்லை!

இங்கிலாந்திலிருந்து திரும்பிய மாதவராயரை, வீட்டிலுள்ளவர்கள் சூழ்ந்து கொண்டு, முக்கியமாக லண்டனைப் பற்றிக் கேள்விகள் கேட்டனர்.

மாதவராயர் :—லண்டன்னு லண்டன்தான்! என்ன அழகு! என்ன வீதிகள்! என்ன கடைத் தெருக்கள்! தெருக் கூட்டுகிறவன் கூட 'ஸூட்'டுப் போட்டுக்கொண்டு இங்கிலீஷ் பேசுகிறான்!

★

### கேள்வியும் பதிலும்

ராமன் :—ஏண்டா பிச்சு! உன்னுடைய அப்பா கண்ணாடிக் கடை வைத்திருக்கிறாரே, உன் வீட்டில் ஒரு கண்ணாடியைக்கூடக் காணோமே!

பிச்சு :—உங்கப்பா பல் வைத்தியராயிற்றே. உங்க பாட்டிக்கு ஒரு பல்கூட இல்லையே!

# சந்திரஹாரம்

ஆசிரியர் : பிரேம் சந்த்

மொழி பெயர்ப்பு : ரா. விழிநாதன்.



முப்பத்திரண்டாம் அத்தியாயம்

## பேஷான யோசனை!

பத்மா பதினாறும் நாளுக்குப் பிறகு ரத்தனுடைய வீட்டில் வெகு நேரம் தங்குவதைக் குறைத்துக் கொண்டான். காலைக்கொரு தடவை அரை மணி அல்லது ஒரு மணி நேரம் வந்து ரத்தனுடன் வார்த்தை பாடிக் கொண்டிருப்பான். கொஞ்ச நாட்களாகத் தயாநாதபாபுவின் உடல் நிலையும் சரியாக இல்லை. அவருக்கு இருநாற்போலிருந்து அடிக்கடி ஜுரம் வர ஆரம்பித்திருந்தது. அந்த நிலைமையில் அவரை விட்டுவிட்டுப் போவது நன்றாயிருக்குமா? தயாநாதபாபுவுக்குக் கொஞ்சம் ஜுரம் வந்தாலே போதும்; ஓரேயடியாகப் பிதற்ற ஆரம்பித்து விடுவார். சில சமயம் பாடுவார்; சில சமயம் அழுவார்; சில சமயம் எமதூதர்களே தன்னெதிரில் நின்று கொண்டு வளிடம் புரிவது போலக் கனவு கண்டு தட்ட முறுவார்!

தயாநாதபாபுவின் அறையில் சமாசாரப் பத்திரிகைகள் கட்டுக் கட்டாகக் கட்டி வைத்திருந்தன. அவருக்குப் பத்திரிகையிடம் அபாரப் பிரேமை. பத்மா அந்த அறையில் அவருக்குத் துணையாக உட்கார்ந்திருப்பான்; பொழுது போகவில்லையென்றால் சமாசாரப் பத்திரிகைகளை எடுத்துப் புரட்டிப் பார்ப்பான். ஒரு நாள் அவன் ஒரு பழைய பத்திரிகையில் சதுரங்கப் படம் ஒன்றைப் பார்த்தான். அதற்குச் சரியான விடை கண்டு பிடித்துச் சொல்லுவோருக்குப் பரிசு அளிக்கப்படும் என்று அதன் கீழே குறிப்பிட்டிருந்தது. அதைப் பார்த்ததும் ரமாகாந்தின் சதுரங்கப் பலகையும், அத்துடன் காய்கள் வைக்கும் பிறையில் அவன் வைத்துவிட்டுச் சென்றிருந்த சதுரங்கப் படங்கள் நிரம்பிய ஒரு நோட்டுப் புத்தகமும் அவனுடைய நினைவுக்கு வந்தன. உடனே அவன் மாடிக்குச் சென்று அந்த நோட்டுப் புத்தகத்தை எடுத்து வந்தான். அந்த நோட்டிலும், பத்திரிகையில் பார்த்த அதே படமும் அதற்கான விடையும் இருந்தது. அதைக் கண்டதும் பத்மாவுக்கு ஒரு யோசனை தோன்றியது.

இந்தப் படத்தை நாமும் ஏதாவது ஒரு பத்திரிகையில் வெளியிட்டால் என்ன? ஒரு வேளை அவர் பார்த்தாலும் பார்ப்பார். இந்தப் படத்துக்கு விடை கண்டு பிடித்து விடுவதென்பது அவ்வளவு சுலபமும் இல்லை; இவ்வளவு பெரிய நகரத்தில் அவருக்குச் சரி சமத்துவமாக ஆடக் கூடியவர்கள் ஒருவர்கூடக் கிடையாதாம். அப்படியிருக்கும்பொழுது, அவருக்குச் சமமாக ஆடக் கூடியவர்கள் மிகக் குறைவாகத் தானே இருப்பார்கள்? ஆகவே, இதைப் பார்த்ததும் அவரே முதலில் விடை கண்டு பிடித்து விடுவார் என்பதில் சந்தேகம் இல்லை. இதன் மூலம், அவருடைய இருப்பிடம் தெரிந்தால் நம் காரியம் ஜயம்தானே? அப்படித் தெரியவில்லை என்றே வைத்துக் கொள்ளுவோம், சில ரூபாய்களுக்குக் கேடு. அவ்வளவுதானே!......... ஆமாம், பரிசு பத்து ரூபாய் என்று வைக்கலாமா? பத்து ரூபாய் என்பது ரொம்பக் குறைவுதான் ......அதுவும் ஒரு நல்லதுக்குத்தான்! பெரிய பெரிய ஆட்டக்காரர்கள் எல்லாம் பரிசு குறைவாக

இருக்கிறது என்பதற்காக அலட்சியமாக இருந்து விடுவார்கள். அதனால் அவருக் குச் சௌகரியமாகி விடும்.

இம்மாதிரிச் சிந்தனையில் ஈடுபட்டுப் பத்மா அன்றைக்கு ரத்தனைப் பார்க்கப் போகவேயில்லை. போக வேண்டும் என்ற எண்ணத்தையே மறந்து விட் டாள். ரத்தன் பகல் முழுவதும் 'பத்மா வருவாள், வருவாள்' என்று வழி மேல் விழி வைத்த வண்ணம் எதிர்பார்த் துக் கொண்டிருந்தாள். ஆனால் பத்மா விளக்கு வைக்கும் நேரமாகியும் வராமற் போகவே ரத்தனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஆகையால் அவள் பத்மா வின் வீட்டுக்குத் தானே போய் வருவது என்ற முடிவுக்கு வந்தாள். கணவர் இறந்த பிறகு இன்றுதான் முதன் முதலாக ரத்தன் வெளிக் கிளம்பி னாள். துயரத்தில் வலித்திருந்த அவளுக்கு நகரமே அழுது வடிந்து கொண்டிருப்பது போல் தோன்றிற்று. முன்னெல்லாம் காரில் ஏறி உட்கார்ந்துவிட்டால், அந்தக் கார் காற் றாய்ப் பறக்க வேண்டும் என்பதுதான் அவளுடைய ஆசை. ஆனால் இன்றைக்கு என்னவோ அவள் வழக்கத்துக்கு மாறாக, மாட்டு வண்டியைக் காட்டிலும் மெது வாகக் காரை ஓட்டச் சொன்னாள். கொஞ்ச தூரம் சென்றதும் அவள் சாலை யோரத்தில் ஒரு பிச்சைக்காரக் கிழவி உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். உடனே காரை நிறுத்தி அவளுக்கு நாலணாக் காசைக் கொடுத்தாள்.

சிறிது நேரத்துக் கெல்லாம் காரும் பத்மாவின் வீட்டை அடைந்து விட்டது. பத்மா, ரத்தனைப் பார்த்ததும், "ரத்தன், என்னால் இன்றைக்கு வர முடியவில்லை. ஏனென்றால் மாமனாருக்குச் சில தினங்க ளாக உடம்பு சரியாயில்லை!" என்றாள்.

உடனே ரத்தன், "இந்த அறையில் தானே அவர் இருக்கிறார்? நீ ஏன் இந்த விஷயத்தை என்னிடம் முன்பே சொல்ல வில்லை?" என்று கேட்டுக் கொண்டே, தயாநாத பாபு படுத்திருந்த அறைப் பக்கம் காலடி எடுத்து வைத்தாள்.

தயாநாத பாபுவுக்கு அப்பொழுது ஜுரம் கொஞ்சம் விட்டிருந்தது. அவர் ரத்தனைப் பார்த்ததும், "கேள்விப்பட்டேன்; மன துக்கு ரொம்ப வருத்தமாயிருந்தது. ஆனா லும் என்ன செய்வது? உலகநீதி இது தானே? இன்றைக்கு இருப்பானை நாளைக் குக் காணோம். என்னையே எடுத்துக் கொள்ளேன், இருந்தபிள்ளை எங்கேயோ தொலைந்து விட்டான். எங்கே போனானோ, யார் கண்டார்கள்? இப்பொழுது பக்கத் தில் இருந்தால் தாகத்துக்குத் தண்ணீ ராவது கொடுக்க மாட்டானா ......இதோ இரண்டு வாண்டுகள் இருக்கின்றனவே, அவைகளுக்கு ஒரு கவலையும் இல்லை. 'மனிதன் இருக்கிறானா, செத்தானா?' என்று கூடக் கவனிப்பதில்லை. என்ன சொல்லி என்ன பயன்? நான் பண்ணின பூஜாபலன் அவ்வளவுதான்!" என்றார்.

ரத்தன் அவருக்கு ஆறுதலளிக்கும் பொருட்டு "அதெல்லாம் ஒன்றும் இல்லை. இது மலேரியாதான். கவலைப்படாதீர்கள். இரண்டு மூன்று நாட்களுக் கெல்லாம் சரியாகி விடும்" என்றாள்.

தயாநாத பாபு கண்களில் எளிமை தாண்டவமாட ரத்தனைப் பார்த்தவாறு, "உங்களுடைய ஆசீர்வாதத்தில் நான் பிழைத்தால் புனர் ஜன்மம்தான். ஆனால் எனக்கு என்னவோ நம்பிக்கையில்லை. நானும் என்னால் ஆனமட்டும் எமனுடன் போராடித்தான் பார்க்கிறேன். இருந்தா லும் அவனை ஜயிக்க முடியாது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் இது மட்டும் நிச்சயம். அவனுடைய ராஜ்யத் துக்குப் போன பிறகு, அவனுடைய கண் களில் விரலை விட்டு ஆட்டிவைத்து விடு வேன். 'எதற்கடா இவனை இங்கு அழைத்து வந்தோம்?' என்று அவனே வருந்தும்படி செய்து விடுகிறேன், பாருங்கள்! ஆமாம், அங்கேயும் சம்மாநிதி ஆத்மாக்கள் வாழுகின்றன; கச்சேரிகள் இருக்கின்றன; நீதிபதிகள், கோர்ட் டுக் குமாஸ்தாக்கள், ஏழைகள், பணக் காரர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். அங் கேயும் வாரா வாரம் தவறாமல் பிரசங்கங் களோ, கதா காலக்ஷேபங்களோ நடப்பது உண்டு. பத்திரிகைகள் கூட வெளி வரு கின்றன!' என்றெல்லாம் ஜனங்கள் சொல்லுகிறார்களே! உண்மையாயிருக் குமா, அம்மா! உண்மையாயிருந்தால் எனக்கு அப்புறம் கவலையேயில்லை. நான் ஏதாவது ஒரு கோர்ட்டில் குமாஸ்தாவாகி விடுவேன். அப்புறம் வருகிற பத்தி ரிகைகளையெல்லாம் படித்துக் கொண்டு 'குஷி'யாகப் பொழுதைப் போக்குவேன். என்ன?" என்றார்.

ரத்தனுக்கு அவருடைய பிதற்றலைக் கேட்டு ஒரே சிரிப்பாக வந்தது. அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை. தயாநாத

பாபுவோ இந்த விஷயங்களை வேடிக்கையாகச் சொல்லவில்லை. சொல்லும்பொழுது அவருடைய முகத்தில் கம்பீர பாவம் தோய்ந்திருந்தது.

இரண்டு இரண்டரை மாதங்களுக்குப் பிறகு இன்றுதான் ரத்தனுக்கு இம்மாதிரிச் சிரிப்பு வந்தது. சமய சந்தர்ப்பம் அறியாமல் வந்த இந்தச் சிரிப்பை அடக்கிக் கொள்ளுவதற்காக அவன் அறையை விட்டு வெளியேறினான். அவனுடன் பத்மாவும் வெளியே வந்தாள்.

ரத்தன் தான் பெரிய குற்றம் செய்து விட்டவன் போல் பத்மாவைப் பார்த்துக் கொண்டே, "தாத்தா மனதில் என்ன எண்ணிக் கொள்ளுவாரோ? 'எனக்கு இங்கே பிராணன் போகிறது, இவனுக்கு ஒரே சிரிப்பாயிருக்கிறது' என்று அவர் எண்ணிக் கொண்டால்....? இனிமேல் நான் அங்கே வரவில்லை, அம்மா! அவர் இம்மாதிரி ஏதாவது சொன்னால் என்னால் சிரிக்காமல் இருக்க முடியாது. இன்றைக்குப் பாரேன், சமய சந்தர்ப்பம் அறியாமல் எனக்குச் சிரிப்பு வந்து விட்டது!" என்றான்.

பிறகு அவன் தன் அசம்பாவிதமான சிரிப்பை எண்ணி மனத்துள் தன்னைத் தானே நொந்து கொண்டான். பத்மா அவன் மனதில் உள்ளதை ஒருவாறு புரிந்து கொண்டு, "எனக்கும் இவருடைய வார்த்தைகளைக் கேட்கும்பொழுது அடக்க முடியாமல் சிரிப்புத்தான் வந்து விடுகிறது, ரத்தன்! இப்பொழுது இவருக்குக் கொஞ்சம் ஜுரம் விட்டிருக்கிறது. ஜுரம் அதிகமாயிருக்கும்பொழுது அவர் பிதற்றுவதைக் கேட்டால், யாராலுமே சிரிப்பை அடக்க முடியாது. இன்றைக்குக் காலையில்கூட அவர் அப்படித்தான் ஏதோ உளறினார். எனக்கோ, அம்மாவுக்கோ ஒன்றுமே புரியவில்லை. அது கிடக்கட்டும் வா, உள்ளே போவோம்" என்றாள்.

"இன்றைக்கு நீ என்னோடு வரவில்லையா?" என்று கேட்டான் ரத்தன்.

"இன்றைக்கு நான் எப்படி வர முடியும், ரத்தன்? நீயே சொல்லு."

"சரி, அப்படியானால் நாளைக்கு வருகிறாயா?"

"எப்படி வர முடியும்? கிழவருக்கு உடம்பு கொஞ்சம் குணமான பிறகுதான் வரலாம்."


"இல்லை, உன்னிடம் ஒரு யோசனை கேட்க வேண்டியிருக்கிறது. அதனால் தான் கூப்பிடுகிறேன். ஆகையால் நீ நாளைக்குக் கட்டாயம் ஒரு நடை வந்துதான் ஆக வேண்டும்."

"என்ன விஷயம்? இப்பொழுதே சொல்லேன்! இங்கே வேறு யார் இருக்கிறார்கள்?"

"'இனிமேல் வீணாகப் பணத்தைச் செலவழித்துக்கொண்டு இங்கே இருப்பானேன்? இந்தப் பங்களாவை விற்றுவிட்டு நாம் ஊருக்குப் போய்விட்டால் என்ன?' என்கிறான் மணி" என்றான் ரத்தன்.

பத்மாவுக்கு இதைக் கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது. அவள் ரத்தனுடைய கையைப் பிடித்துக் கொண்டு, "என்ன? என்னை விட்டுவிட்டு நீ ஊருக்குப் போய் விடப் போகிறாயா? அதெல்லாம் கூடவே கூடாது. நான் உன்னை ஒருக்காலும் ஊருக்குப் போகவிட முடியாது. பங்களாவை விற்பதாயிருந்தால் மணியிடம் சொல்லி விற்கச் சொல்லு. எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் அவர் இருக்கும் இடம் தெரியாத வரை உன்னை நான் விட முடியாது. நீ ஊரை விட்டுப் போயிருந்த அந்த ஒரு வாரமும் எனக்கு மலையாக இருந்தது. உன்னைப் பிரிந்து என்னால் ஒரு கணமும் தனித்து உயிர் வாழ முடியாது. நீ என்னை விட்டுவிட்டுப் போகக் கூடாது. உன்னை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்!" என்றாள்.

ரத்தனுடைய கண்களில் நீர் துளித்தது. "எனக்கும் உன்னைப் பிரிந்து தனித்திருப்



பது என்பது மிகவும் சிரமமான காரிய மாகத்தான் படுகிறது. ஆகையால் 'நான் ஊருக்கு வர முடியாது' என்று மணியிடம் சொல்லி விடுகிறேன்!" என்றான்.

பத்மா அவனுடைய கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, மாடியில் உள்ள தன் அறையை அடைந்தாள். பிறகு அவனுடைய தோள்களில் தன் கையைப் போட்டுக் கொண்டு, "என்னை விட்டுவிட்டுப் போக மாட்டாயே!" என்று கெஞ்சாத தோஷமாகக் கேட்டாள்.

ரத்தனும் அன்பொழுகும் குரலில், "இந்த உலகமே அஸ்தமித்துப் போனாலும் சரி, நான் உன்னைத் தனியே விட்டுவிட்டுப் போகமாட்டேன். இது நிச்சயம். எனக்கு அங்கே என்ன வைத்திருக்கிறது? ஆமாம், பங்களாவை ஏன் விற்க வேண்டும்? இருநூறு — இருநூற்றைம்பது ரூபாய் வீட்டு வாடகை மூலம் வருகிறது. நம் இருவருடைய செலவுக்கும் அது போதாதா? நான் இன்றைக்கே மணியிடம், 'அதெல்லாம் நான் வர முடியாது' என்று கண்டிப்பாகச் சொல்லி விடுகிறேன்" என்றான்.



அடுத்த நிமிஷம் ரத்தனுடைய பார்வை மேஜை மீதில் கிடந்த சதுரங்கக் காய்களின் மீதும், சதுரங்கப் படங்களின்மீதும் சென்றது. உடனே அவன் பத்மாவை நோக்கி, "யாருடன் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்தாய்?" என்று கேட்டான்.

பத்மா சதுரங்கப் படத்தைக் கொண்டு தன் பாக்கியத்தைப் பரீக்ஷிப்பதற்காகப் போட்டிருந்த 'பிளானை' ரத்தனிடம் ஆதியோடு அந்தமாகச் சொன்னாள்.

ஆனால் ரத்தன் அதை 'அசட்டுத்தனம், பித்துக் குளித்தனம்' என்றெல்லாம் எண்ணி விடாமல் இருக்க வேண்டுமே!' என்று அவளுக்கு உள்ளூற பயம்.

பத்மாவின் யோசனையைக் கேட்டதும் ரத்தனின் வதனத்தில் புன்முறுவல் படர்ந்தது. அவன், "பத்துரூபாய் வெகுமதி என்பது ரொம்பக் குறைச்சல். யாருமே கலந்துகொள்ள மாட்டார்கள். குறைந்தது ஐம்பது ரூபாயாவது வெகுமதி வைக்க வேண்டும். ஆனால் அதைப்பற்றி நீ கவலைப் படாதே! அந்த வெகுமதிக்கான பணத்தை நான் தருகிறேன்" என்றான்.

"வெகுமதி அதிகமாயிருந்தால் பெரிய பெரிய ஆட்டக்காரர்களெல்லாம் கலந்து கொண்டு விடுவார்களே! அப்பொழுது நாம் நினைத்த காரியம் கைகூடாமற் போய்விட்டால்......?" என்று சந்தேகத்தை எழுப்பினாள் பத்மா.

ரத்தன் மிகவும் திடமான குரலில், "பரவாயில்லை; அப்படியொன்றும் ஆகி விடாது. இந்தப் படம் உன் அகத்துக்காரரின் கண்களில் பட்டுவிட்டால், அவர் இதற்குச் சரியான விடை கண்டு பிடித்து விடுவார் என்பதில் எனக்குத் துளிக்கூடச் சந்தேகம் இல்லை. அவருடைய விடைதான் முதலாவதாக வந்து சேரும் என்றும் நம்புகிறேன். அப்படியே முதலாவதாக வரா விட்டால் தான் என்ன கெட்டுவிடப் போகிறது? பத்திரிகை ஆபீஸுக்கு விடை யனுப்பும்பொழுது அவர் தன் விலாசத்தைக் கொடுத்துத்தானே ஆக வேண்டும்? பத்திரிகை ஆபீஸுக்கு அவருடைய விலாசம் கிடைத்து விட்டாலே நம்முடைய காரியம் கைகூடினாற் போலத்தானே?" என்றான்.

"உனக்கு நம்பிக்கையிருக்கிறதா?"

"நம்பிக்கையில்லாவிட்டால் இவ்வளவு தூரம் சொல்லுவேனா? சரி, நாளைக் காலையில் நான் பணம் கொண்டு வந்து தருகிறேன்."

"அப்படியானால் இன்றைக்கு நான் கடிதம் எழுதி வைக்கட்டுமா? ஆமாம், எந்தப் பத்திரிகைக்கு அனுப்பலாம்?"

"கல்கத்தாவிலே, 'பிரஜாமித்திரன்' என்ற பத்திரிகையைத்தான் ஜனங்கள் அதிகமாக வாங்கிப் படிக்கிறார்கள். வாசக சாலைகளிலும் அந்தப் பத்திரிகைதான் அதிகமாக உலாவுகிறது."

"அப்படியானால் அந்தப் பத்திரிகைக்கே எழுதுகிறேன். ஆமாம், அவர்கள் படத்தைப் பிரசுரிக்காமல் நம் பணத்தை ஏப்பம் விட்டுவிட்டால்......?"

"போனால் பணம்தானே போகும்? வேறொன்றுமில்லையே! ஆனால் பத்திரிகைக்காரர்கள்—அதுவும் தேச நன்மைக்காகப் பாடுபடும் பத்திரிகைக்காரர்கள், அப்படியெல்லாம் யோக்கியப் பொறுப்பு இல்லாமல் நடந்து கொள்ள மாட்டார்கள். என்னோடு நீ இப்பொழுதே வந்தால் நான் உன் கையிலேயே வேண்டுமானாலும் பணத்தைக் கொடுத்து விடுகிறேன்."

"இந்த வேளையில் எப்படி வருவது? காலைக்கே வருகிறேன்."

இதற்குள் நடராஜபாபு, "பத்மா! பத்மா!" என்று இரைந்து கூப்பிட்டார்.

பத்மா தகப்பனுடைய குரலைக் கேட்டதும், 'நட நட' வென்று வேகமாக இறங்கி அவருடைய அறைப் பக்கமாக ஓடினாள். ரத்தனும் அவளுடன் கூடவே கீழே இறங்கி வீட்டுக்குப் போவதற்காகப் புறப்பட்டான். ஜாகேசவரி கையில் ஒரு விசிறியை வைத்துக்கொண்டு விசிறியவாறே அவன் பக்கம் வந்தாள். அதைக் கண்ணுற்றதும் ரத்தன் "என் மாமி, உங்களுக்குப் புழுக்கமாயிருக்கிறதா என்ன? எனக்கெல்லாம் குளிர் 'வெட வெட' வென்று நடுக்குகிறதே! ஆமாம், உங்கள் கால்களிலெல்லாம் இதென்ன வெளுப்பு! மாவு, கீவு அரைத்தீர்களோ?" என்று கேட்டான்.

"ஆமாம், வைத்தியர் 'இவருக்குக் கையால் அரைத்த கோதுமை மாவுக் கஞ்சி வைத்துத்தான் ஆகாரம் கொடுக்க வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார். கடைத் தெருவில் கையால் அரைத்த மாவு எங்கே கிடைக்கிறது? இந்தத் தெருவிலே மாவு அரைத்துக் கொடுக்க ஒரு கூலிக்காரிகூடக் கிடைக்கவில்லை. இந்த நாளில்தான் கூலிக்காரிகள் முதற்கொண்டு மெஷினிலேயே மாவு அரைத்துக்கொண்டு விடுகிறார்களே! நான் படிக்கு ஓரணா வீதம் கூலி கொடுக்கத் தயார். ஆனால் யாராவது கிடைத்தால் தானே!" என்று சிறிது வெட்கத்துடன் சொன்னாள் ஜாகேசவரி.

ரத்தன் ஆச்சரியத்துடன், "இந்த வயதில் உங்களால் இயந்திரம் பிடித்து எப்படித்தான் சுற்ற முடிகிறதோ?" என்று கேட்டான்.

ஜாகேசவரி நாணிப் புன்முறுவல் பூத்துக் கொண்டு, "அதிகம் ஒன்றும் இல்லையே! கால்படிதானே! கால்படி அரைத்தால் இரண்டு நாளைக்கு ஆகிறது. அவருக்குக் கஞ்சி இறுகினால்தானே? மாட்டுப் பெண், 'நான் அரைக்கிறேன்' என்று தான் சொன்னாள். அவள் அரைத்தால் நான் அல்லவா அவர் பக்கத்தில் துணைக்கு உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கும்! என்னை இரவு முழுவதும் மாவரைக்கச் சொன்னால் கூட நான் தயார். ஆனால் அவரருகில் உட்காருவது என்றாலே எனக்குப் பயமாயிருக்கிறது! உளறிக் கொட்டி ஆளைக் கிலி பிடிக்க வைத்து விடுகிறார்!" என்றாள்.

ரத்தன் சிறிது நேரம் அவளுடன் நின்றான். பிறகு 'விடு விடு' என்று இயந்திரம் இருக்கும் இடத்துக்குச் சென்று அதனடியில் உட்கார்ந்துகொண்டு, "மாமி, இந்தத் தள்ளாத வயது காலத்தில் உங்களால் எல்லாம் இயந்திரம் இழுக்க முடியுமா? கொஞ்சம் கோதுமை கொண்டு வாருங்கள். நான் மாவு அரைத்துத் தருகிறேன்!" என்றான்.

ஜாகேசவரி இரண்டு கைகளாலும் காதைப் பொத்திக் கொண்டு, "என்னப்பச் சொன்னாய்? நீயாவது மாவு அரைக்கவாவது! அதெல்லாம் கூடவே கூடாது!" என்றாள்.

"மாமி, நான் என் பிறந்தகத்தில் இருந்தபொழுது வேண்டிய அளவு மாவு அரைத்திருக்கிறேன். எனக்கு மாவு அரைத்துப் பழக்கமுண்டு. கொஞ்சம் கோதுமை கொண்டு வாருங்கள், சொல்லுகிறேன்!" என்றான் ரத்தன்.

"உனக்கு அரைத்துப் பழக்கம் இராது; கை வலிக்கும்; கொப்புளித்தும் விடும். வேண்டாம்."

"அதெல்லாம் ஒன்றும் ஆகாது; கொஞ்சம் கோதுமை கொண்டு வாருங்களேன்!"

ஜாகேசவரி அவனுடைய கையைப் பிடித்துத் தூக்கியவாறே, "வீட்டில் இப்பொழுது கோதுமையில்லை. கடைக்குப் போய் வாங்கி வந்தாக வேண்டும். இப்பொழுது யார் போகப் போகிறார்கள்?" என்றாள்.

"எதற்காகப் பொய் சொல்லுகிறீர்கள்? வீட்டில் கோதுமை இல்லாமல் இருக்குமா? வாருங்கள், உங்கள் வீட்டுச் சாமான் அறையை நான் பார்க்கிறேன்."

சமையலறைக்குப் பக்கத்து அறையில் சாமான்கள் வைத்திருந்தன. ரத்தன் அந்த அறைக்குள் சென்று ஒவ்வொரு பாத்திரமாகக் கைவிட்டுத் துழாவிப் பார்க்கலானான். கடைசியில் ஒரு பாத்திரத்தில் கோதுமை இருந்தது. ரத்தன் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாட, "என் மாமி, கோதுமை இல்லை என்று சொன்னீர்களே; இது என்ன? 'நான் மாவு அரைக்கக்

கூடாது' என்பதற்காகத்தானே அப்படிச் சொன்னீர்கள்?" என்றான்.

பிறகு அவன் ஒரு சின்னக் கூடையில் கொஞ்சம் கோதுமையை எடுத்துக் கொண்டு மாவு அரைப்பதற்காக இயந்திரத்தின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான். அதைக் கண்ட ஞானேசுவரி பறந்து விழுந்து கொண்டு தன் மாட்டுப் பெண் பத்மாவிடம் ஓடிப்போய், "பார்த்தாயோடி, உன் தோழி செய்யும் காரியத்தை! இயந்திரத் தடியில் போய் மாவு அரைக்க உட்கார்ந்து விட்டான்! நான் என்ன சொல்லியும் கேட்கமாட்டேன் என்கிறான்! யாராவது பார்த்தால் என்ன சொல்லுவார்கள்?" என்றாள்.

மாமியாரின் முகத்தில் இப்படிக் கலவரம் தாண்டவமாடுவதைக் கண்ட பத்மாவுக்கு உள்ளூற ஒரு தனி ஆனந்தம் ஏற்பட்டது. ஆகவே அவள் தன் மாமியாருக்கு இன்னும் அதிகக் கலவரம் உண்டு பண்ணும் நோக்கத்துடன், "அம்மா, என்ன இருந்தாலும் நீங்கள் அவனை இப்படி மாவு அரைக்க விட்டது ரொம்பத் தப்பு! யாராவது பார்த்து விட்டால் நம் மானமே யல்லவா கப்பலேறிவிடும்? வாருங்கள், நான் சொல்லிப் பார்க்கிறேன்!" என்று சொல்லியவாறே, அறையிலிருந்து வெளியே வந்தாள்.

ஞானேசுவரி அதே பழைய கலவரத்துடன், "நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன், அவன் கேட்டால் தானே! அதனால்தான் உன்னிடம் சொல்லுவோம் என்று ஓடி வந்தேன்!" என்றாள்.

பத்மா போனபொழுது, ரத்தன் மாவு அரைப்பதில் மும்முரமாக முனைந்திருந்தான். அவனுக்கு அது வேடிக்கையாக இருந்தது. அதனால் அவனுடைய முகமும் மலர்ந்திருந்தது. ஆனால் அவனுடைய நெற்றியில் வியர்வைத் துளிகள் முத்து முத்தாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவனுடைய பலமான கை, இயந்திரத்தைப் பம்பரம்போல வெகு வேகமாகச் சுற்றிக் கொண்டிருந்தது.

பத்மா அருகில் சென்று சிரித்துக் கொண்டே, ‘இந்தாம்மா, மாவு ரொம்ப மெல்லியதாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கூலி கிடைக்காது; இப்பொழுதே சொல்லி விட்டேன்!" என்றாள்.

ரத்தனுக்கு அவள் என்ன சொன்னாள் என்று புரியவில்லை. இருந்தாலும் செவிடர்களைப் போல ஒரு சிரிப்புச் சிரித்து வைத்தான். ஆகவே, பத்மா இன்னும் சற்று உரக்க, "மாவு ரொம்ப 'நைஸா'க இருக்க வேண்டும். இல்லாவிட்டால் காசு கிடைக்காது. சொல்லுவது புரிகிறதா?" என்றாள்.

ரத்தனும் சிரித்துக் கொண்டே, "நீங்கள் எப்படியிருக்கவேண்டும் என்று சொல்லுகிறீர்களோ, அப்படி அரைத்துத் தருகிறேன், அம்மா! ஆனால் காசு நிறையக் கொடுக்க வேண்டும்!" என்றான்.

"படிக்குப் பத்து தம்பிடிதானே?"

"என்ன அம்மா இது? பத்துத் தம்பிடி என்று சொல்கிறீங்க? ஒன்னரையணுவுக்கு ஒரு தம்பிடி குறைஞ்சாக்கூட வாங்கிக் கொள்ள மாட்டேன்."

"அப்படியானால் போதும் அம்மா, நீ மாவு அரைத்தது! போய்க் கை கழுவிக் கொண்டு அரைத்த வரைக்கும் கூலியை வாங்கிக் கொண்டு போ!"

ரத்தன் தன் வேடிக்கைப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு, "அதெல்லாம் முடியாது. இதை முழுவதும் அரைத்து விட்டுத்தான் எழுந்திருக்கப் போகிறேன். நீ போய் உன் காரியத்தைப் பார். இங்கே நிற்காதே!" என்று இயந்திரத்தை இன்னும் வேகமாகச் சுற்றலானான்.

"நானும் உனக்கு ஒத்தாசையாக ஒரு கை பிடிக்கிறேனே!" என்று சொல்லிய வண்ணம் பத்மாவும் அவனெதிரே உட்கார்ந்தாள்.

பிறகு ஞானேசுவரியைப் பார்த்து, "அம்மா நீங்கள் சற்று அவ்விடம் போய் உட்கார்ந்திருங்கள். நான் இதோ வந்து விடுகிறேன்" என்றாள்.


ஞானேசுவரி அவ்விடத்தை விட்டு நகர்ந்ததும், ரத்தன், "ஏதாவது ஒரு பாட்டுப் பாடேன். பாடிக்கொண்டே இயந்திரம் சுற்றினால் சிரமம் தோன்றாது!" என்றான்.

"நீயும் சேர்ந்து பாடுவதாயிருந்தால் பாடுகிறேன்! என்ன பாட்டுப் பாடலாம்? 'எங்கு மறைந்தனையோ?' என்ற பாட்டைப் பாடுவோமா?" என்றாள் பத்மா.

இருவரும் இயந்திரத்தைச் சுற்றிக் கொண்டே சேர்ந்து பாடலாயினர்.


இருவருடைய சாரீரமும் இனிமையாயிருந்தது. இயந்திரத்தின் 'கர் கர்' என்ற சப்தம், அவர்களுடைய பாட்டுக்குச் சுருதியாகத் திகழ்ந்தது. அவர்கள் இருவரும் ஆனந்தமாகத் தங்களை மறந்து பாடிக் கொண்டிருந்தது, அருளோதயத்தின் பூரணப் பொலிவில் லயித்துக் 'கல கல' வென்று இனிமையாகக் கூவும் இரு பட்சிகளை நினைவுறுத்தியது. (தொடரும்)


4A
Policy
WORLD WIDE POLICY NO. 558
ஒரே ஒரு பிரீமியம்
உங்கள் வருங்காலத்திய
எழுதும் நிலைமையின் முன்னேற்
றத்தை இன்ஷ்யூர் செய்கிறது.
. . . ஏனென்றால் மெண்ட்மோர் ஆடோப்ளோ பேனா இந்தியாவின் சீதோஷ்ண நிலையைத் தாங்கக்கூடிய பொருள்களால் விசேஷமாக செய்யப்பட்டது. ட்ராப் - பில்லிங், லீவர், ஸ்டட் - பில்லிங் முதலிய மாடல்களில் கிடைக்கிறது. அதனுடைய கெட்டியான நிப் 14 காரட் தங்கத்தால் செய்யப்பட்டது. ஆஸ்மி இருடியத்தில் தோய்க்கப்பட்ட முனையோடுகூடியது. ஒவ்வொரு பேனா குழலின்மேலும் நிப் பின்மேலும் மெண்ட்மோர் என்ற பெயர் செதுக்கப்பட்டிருக்கிறதா என்று கவனித்துப் பாருங்கள். உங்கள் ஆயுட்கால சேவையின் அஷ்யூரன்ஸ்.
ரூ. 15/-
இங்கிலாந்தில் செய்யப்பட்டது.
MENTMORE
Auto-Flow
மெண்ட்மோர் ஆடோப்ளோ.
FOUNTAIN PEN
வர்த்தக விசாரணைகளுக்கு உரிமைபெற்ற முழு வினியோகஸ்தர்:
மூல்லி & பிப்ஸ் (இந்தியா) லிமிடெட் 15, கங்குராம செட்டித் தெரு, மதராஸ்





Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk Madras.

# கல்கி



KALKI நவம்பர் 30, 1947 4 அணா

---




ஏஜண்டுகள்:—ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், தைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா, பெத்னாப்பூர் & செகந்தராபாத்; கிரிஜா கமடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி.

சிலோன் ஏஜண்டுகள்:—M.O.A. கனி & கோ., 96, சதாம்ஸ் ரோடு, கோட்டை, கொழும்பு




மதராஸ் ஏஜண்டு:

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைகிராப்ட்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி :: மதராஸ்

கோவை, நீலகிரி ஜில்லாக்கள் & பாலக்காடுக்கு ஏஜண்டு:

B. பாலபட்டாபி,

வைசியாள் தெரு. கோயமுத்தூர்

REGD. NO. M. 4392

License No. 18
Licensed to post without prepayment